வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 19

எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளின் சுவாரசியங்கள் - I

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.
Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 19

எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளின் சுவாரசியங்கள் - I

முனைவர் செ. இராஜேஸ்வரி **M. A., M. Phil., Ph. D.,**

சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.

Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 19
நூலின் பெயர்	:	எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளின் சுவாரசியங்கள் - I
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
துறை	:	சினிமா, சமூகம்
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/460, தினமணி நகர், மதுரை–625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	2020
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	128
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	Vetrithirumagan MGR – 19
Title	:	MGR Sandai Katchikalin Swarashyangal - I
Author	:	Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Subject	:	Cinema, Society
Cover Design	:	C. Meenatchi
Publisher	:	Chandrothayam Pathippagam 3/460, Dinamani Nagar Madurai – 625 018 Phone : 7010997639
Month of Publish	:	2020
Pages	:	128
Price	:	Rs.200/-

அன்புக் காணிக்கை

எம்.ஜி.ஆருடன் சண்டைக்காட்சிகளில்

நடித்த ஸ்டண்ட் நடிகர்களுக்கு

இந் நூல் அன்புக் காணிக்கை.



சண்டைக் கலைஞர்களுடன் எம்.ஜி.ஆர்.


மே
23 உ முதல்!
எம்.ஜி.ஆர்
உழைக்கும் கரங்கள்
உமா
கமலா
K. சங்கர்



எம்.ஜி.ஆரின் உண்மை தொண்டர்

முன்னாள் சென்னை பெருநகர மேயர், ஆரோக்கியத்தின்

வழிகாட்டி ***மனித நேயச் செம்மல் சைதையார்***

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!


அன்றும்-இன்றும்-என்றுமே எழுச்சி மிக்க
நடிகரின் புரட்சிப்படம்!
3 வது வாரம்
பிளாசா
கிரௌன்
புவனேசுவரி
புரட்சி நடிகரின்
மகாதேவி

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** *போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.*

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** *போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல்*

ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார்.

மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி ***"ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100"*** என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் இரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***
2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***
4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***
5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***
6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***
7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***
8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***
9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***
10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***
11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***
12. ***இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,***

13. ***முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்***

14. ***இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.***

15. ***எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]***

16. ***படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு***

17. ***Unique Fandom of MGR** (எம்.ஜி.ஆர். பற்றிய ஆங்கில நூல்)*

18. *எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்* (Professional Ethics in MGR Movies)

19. ***எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் - I** ஆகியவை வெளிவந்துள்ளன.*

*தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் **பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி, திட்டிவாசல் பெண்ணொருத்தி, மற்றும் தேனடையும் வரலாறு** என்ற கவிதை நூல்களை இவர் முறையே **"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)",** என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.*

*தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் **பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும்***

பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில் இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதை காதல், கவிதை முகங்கள் (தொகுப்பாசிரியர்) *என்ற நூலையும் வெளியிட்டார்.*

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் ***பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், தமிழகத்தில் பெண் தெய்வ வழிபாடு,*** *ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். காணாமல் போன கடவுளர் என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி வருகிறார்.*

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் *என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள்* ***'அமராவதியின் காதல்'*** *என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்குச் சென்றவை பற்றி எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளி வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய* ***"என்னோட ராசி நல்ல ராசி"*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில்* ***'மர வழிபாட்டின் வேர்களைத் தேடி (Deep into the roots of Tree worship), காளியும் தேவியும், உலகளாவிய காளி கோட்பாடு'*** *போன்ற ஆன்மீகக் கட்டுரைகள் வெளிவருகின்றன.*

உள்ளடக்கம்

எம்.ஜி.ஆர். பற்றி கவிஞர் கண்ணதாசன் கவிதை

நல்லோர்களெல்லாம்
நாடும் அறிவுடைமை
உள்ளோரே என்றும்
உயிர்த்தமி ழோடிருப்பவர்கள்!
கல்லூரிப் படியேறிக்
கல்லாத போதினிலும்
சொல்லும் மொழியெல்லாம்
சுவையான செந்தமிழாய்
வெல்லும் படிசொல்லும்
வீரனைநாம் பெற்றுள்ளோம்.
மன்னர் இவரொருநாள்
மலையாளம் சென்றிருந்தார்
அங்கும் தமிழில்தான்
அழகான மொழியுரைத்தார்
'கேரளத்தில் பேசு' எனக்
கேட்டார்கள் தோழரெல்லாம்
'ஓரளவும் பேசேன் நான்;
உயிர்படைத்த நாள்முதலாய்
உண்ணும் உணவும்
உலவுகின்ற வீதிகளும்
எண்ணும் பொருளும்
ஏற்றதோர் தொழில்களும்
செந்தமிழால் வந்த
திருவென்றோ' பெற்றவன்நான்!
அந்த மொழி இன்றி
அடுத்தமொழி பேசுவதோ?
என்று பதிலுரைத்தார்;
இவர்பெருமை யார்க்குவரும்?
பொன்மனத்துச் செல்வர்
புரட்சித்தலைவரிவர்
தமிழரிலை என்றால்
தமிழுக்கே களங்கம் வரும்!

உதவி. காந்தி கண்ணதாசன்

1. சண்டைக் காட்சி பங்கும் பயனும்

எம்.ஜி.ஆர். படங்களில் சண்டைக் காட்சிகள் தவறாமல் இடம் பெறுவதுண்டு. சண்டைக் காட்சிகள் இடம் பெற வேண்டியதன் அவசியம் என்ன என்று கேட்டபோது இந்தியாவின் புராணங்களும், இதிகாசங்களும் சண்டையாகத் தான் அமைந்துள்ளன. இராமாயணத்தில் ராம ராவண போர், மகாபாரதத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையிலான போர் என்று காப்பியங்களிலும் இதிகாசங்களிலும் போர்க் காட்சிகளோடு படைப்புகள் நிறைவடைகின்றன. எனவே நன்மை தீமை இவற்றிற்கிடையே நடைபெறும் போராட்டத்தில் நன்மையே வெல்லும் என்பதற்கு ஆதாரமாக அவற்றிற்கு இடையிலான சண்டைக் காட்சிப்படுத்தப்படுகிறது. எம்.ஜி.ஆர். படங்களில் நல்லவன் வாழ்வான் கெட்டவன் அழிவான் என்ற கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் படத்தின் இறுதியில் பெரிய முக்கியமான சண்டைக்காட்சி இடம்பெறும். பட ஆரம்பத்திலும் இடையிலும் ஆங்காங்கே ஒரு சில சண்டைக் காட்சிகள் இடம் பெறுவதும் உண்டு. பொதுவாக அமையும் சண்டைக் காட்சி அதிக தீவிரம் இல்லாமல் கோபம் வெறுப்பு ஆத்திரம் ஆகியவற்றிற்கு

இடமளிக்காமல் காணப்படும் ஆனால் படத்தின் இறுதியில் இடம்பெறும் சண்டைக் காட்சி மிகுந்த ஆவேசத்துடன் இலட்சிய வெறியோடும் வெற்றி என்ற ஒரே இலக்கை மட்டுமே கருத்தில் கொண்டதாகவும் அமையும். இவ்வாறான இறுதிக்காட்சி நமது பண்டைய இதிகாச காப்பியங்களில் இடம்பெறும் ராம ராவண போர், பாரதப்போர் போல காட்சிதரும். இராமாயண மகாபாரதங்களில் போர்க் காட்சிகளைக் காண்கிறோம். அதற்கு முன்பும் போர்கள் நடந்ததாக புராணங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

1. இந்திரனுக்கும் விராடனுக்கும் நடந்த பெரும் போர்

நீராதாரங்களைப் பறித்துச் சென்ற விராடன் எதிர்த்துப் போரிட்டு அந்த நீராதாரங்களை திரும்ப மீட்டுக் கொடுத்தான். விராடன் கொல்வதற்கு ஆயுதம் வேண்டுமென்று திருமாலிடம் இருந்து வஜ்ராயுதத்தை வேண்டிப் பெற்றான். வஜ்ராயுதம் ததீசி முனிவரின் முதுகெலும்பிலிருந்து செய்யப்பட்டதாகும்.

2. மகிஷாசுர வர்தினி

மகிஷாசுரன் என்பவன் திருமணமாகாத கன்னிப் பெண்ணால் மட்டுமே கொல்லப்பட வரம் பெற்றிருந்ததால் சரஸ்வதி லட்சுமி பார்வதி ஆகிய முப்பெரும் தேவியரும் இணைந்து ஒரே பெண் உருக்கொண்டு எருமையின் மீது ஏறி மகிஷாசுரவர்த்தினியாக வந்து மகிஷாசுரனைக் கொன்றனர். இதற்கு முன்பு சும்பன், நிசும்பனை காளி கொன்றாள். ரத்த பீஜத்தை துர்க்கை கொன்றாள். தாரகாசுரனை முருகன் கொன்றான். தங்கம், வெள்ளி, இரும்பு கோட்டைகளின் தலைவனாக இருந்த திரிபுரசுரனை சிவபெருமான் கொன்றார்.

3. தேவாசுரப் போர்

தேவர்களும் அசுரர்களும் நடத்திய போர் தேவாசுரப்போர். மரணத்தை வெல்லும் அமிர்தம் வேண்டும் என்று தேவர்கள் போரிட்டனர். அசுரர்களும் போட்டிக்கு வந்தனர். அப்போது அசுரர்கள் தரப்பில் பாலி என்பவனும் தேவர்கள் தரப்பில் சக்கரா என்பவனும் தலைமை ஏற்றனர். பாலி தேவர்களின் தலைவனான இந்திரனை மேலோகத்தை விட்டு கீழே போகும்படி வீசி எறிந்தான். தேவேந்திரன் திருமாலின் உதவியை பெற வேண்டி தன் தாயின் உதவியை நாடினான். திருமால் வாமன அவதாரம் எடுத்து வந்து தேவலோகத்தை தர்மமாக பெற்றார். பின்பு அதனை தேவேந்திரனிடம் ஒப்படைத்தார்.

4. பத்து மன்னர்களின் போர்

வசிஷ்டர் - விசுவாமித்ரர் என்ற இரண்டு மாபெரும் முனிவர்களுக்கு இடையே போர் நடந்தது. விசுவாமித்திரருடன் பத்து வேத இனக்குழுக்கள் சேர்ந்து போரிட்டன. இந்திரனின் உதவியால் வசிஷ்டர் வெற்றி பெற்றார். விசுவாமித்திரரும் அவரது பத்து இனக்குழுவின் மன்னரும் தோல்வியைத் தழுவினர்.

5. தேவர்களுக்கும் ராவணனுக்கும் இடையிலான போர்

மேகநாதன் இந்திரனின் ஆதிக்கம் கண்டு பொறுக்காமல் அவர்களோடு போரிட்டு அவர்களை வென்றான். அதன் தலைவனான இந்திரனை வென்றதால் அவன் இந்திரஜித் என்ற பட்டப்பெயர் பெற்றான். பின்பு பிரம்மா இப்போரில் தலையிட்டு இந்திரனின் உயிரைக் காப்பாற்றினார்.



இந்திய வரலாற்றில் இதிகாச காலங்களிலும், காப்பிய காலங்களிலும், புராண காலங்களிலும் பல போர்கள் நடைபெற்றுள்ளன. பழஞ் சுவடிகள் போர் குறித்த தகவல்களைத் தருகின்றன. முருகனுக்கும் சூரபத்மனுக்கும் இடையே 18 ஆண்டுகள் போர் நடைபெற்றுள்ளது. இராமனுக்கும், இராவணனுக்கும் இடையே 18 மாதங்கள் போர் நடந்துள்ளது. மகாபாரதத்தில் கௌரவர்களுக்கும், பாண்டவர்களுக்கும் இடையே 18 நாட்கள் போர் நடைபெற்றுள்ளது. தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவனுக்கும் நாட்டு மன்னர்களான கனக விசயர்க்கும் இடையே 18 நாட்கள் போர் நடந்ததாக அறிய முடிகிறது.

எம்.ஜி.ஆர். படங்களில் சண்டைக்காட்சி இல்லாத படங்களை விரல்விட்டு எண்ணி விடலாம். இவருடைய படங்கள் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டத்தில் நன்மையே வெல்லும் என்ற மாறா உண்மையை வலியுறுத்துகின்றன. எனவே நல்லவராக நடிக்கும் இவரே சண்டைக்காட்சிகளில் வெற்றி பெறுவார். வில்லனாக வரும் தீயவன் தோல்வி அடைவான்.

இதுவே பொதுவான அமைப்பு. அடிமைப்பெண், பெரிய இடத்துப் பெண் போன்ற படங்களில் தீயவனின் சூழ்ச்சியால் எம்.ஜி.ஆர். தோற்றுப் போவதும் உண்டு. படத்தின் முடிவில் வரும் சண்டைக்காட்சியை விட ஆரம்பத்திலும் நடுவிலும் வரும் சண்டைகள் தீவிரம் குறைந்ததாக தோன்றும். இறுதி சண்டைக்காட்சி மிகுந்த பரபரப்போடும் ஆவேசத்தோடும் காணப்படும்.

எம்.ஜி.ஆர். படங்களில் சண்டை என்பது இரண்டு ஆண்களுக்கு இடையே நடப்பதனால் அவர்களின் உடல் வலிமை நிரூபிக்கப்படும். சண்டைக்காட்சிகள் ஆண்களுக்கு மட்டுமே உரியன என்ற எண்ணத்தை மாற்றும் வகையில் பெண்களும் குழந்தைகளும் ரசிக்கும்படியாக பல சுவாரஸ்யமான விசயங்கள் சண்டைக்காட்சிகளில் சேர்க்கப்படும். சில சண்டைக்காட்சிகளில் இடையிடையே கதாநாயகி அல்லது தாய் இடம் பெறுவர். வேட்டைக்காரன், பெற்றால்தான் பிள்ளையா, கன்னித்தாய் போன்ற படங்களின் சண்டைக் காட்சிகளில் குழந்தைகள் இடம்பெறுவதுண்டு. அரசகட்டளை, எங்கள் தங்கம் போன்ற படங்களின் சண்டைக் காட்சியில், பாடல்களும் இடம் பெறும்.

எம்.ஜி.ஆர். படங்களில் சண்டைக்காட்சி என்பது இரண்டு மனிதர்களுக்கு இடையிலான சண்டைக் காட்சியாகவும் இருக்கும். குலேபகாவலி, அடிமைப்பெண் ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். புலி, சிங்கம் போன்ற காட்டு விலங்குகளுடன் சண்டைப் போடும் காட்சிகள் உண்டு. தேவர் தயாரித்த படங்களில் விலங்குகள் எம்.ஜி.ஆரை எதிர்க்கும்



கன்னித்தாய்

காட்சிகள் இடம் பெறும். வேட்டைக்காரன் படத்தில் சிங்கத்தின் பாதத்தில் குத்தியிருந்த முள்ளை எம்.ஜி.ஆர். அகற்றிவிடுவார். அந்த சிங்கம் எம்.ஜி.ஆரின் மகனைக் காப்பாற்றும். அதற்கு நன்றிக்கடனாக எந்த சிங்கத்தையும் இனி நான் வேட்டையாட மாட்டேன் என்று ஓர் உறுதிமொழி எடுப்பார். இந்நிகழ்ச்சி கிரேக்க வீரன் ஆன்ராக்லாஜ கதையின் மறுவடிவம் ஆகும்.

எம்.ஜி.ஆர். தன் படங்களில் சண்டைக்காட்சிகளின் போது பலவகையான கருவிகளை பயன்படுத்துவார். ஒரு படத்தில் பயன்படுத்தப்பட்ட கருவி அடுத்த மூன்று வருடங்களுக்கு வரும் படங்களில் பயன்படுத்தப்பட மாட்டாது. கத்திச்சண்டையிலும், சிலம்பு சுற்றுவதிலும் எம்.ஜி.ஆர். வல்லவராகத் திகழ்ந்தார்.



வேட்டைக்காரன்

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் வரும் 'நான் ஆணையிட்டால்' பாட்டுக் காட்சியில் சவுக்கை வீசி ஆடி வரும்போது அவர் சிலம்பாட்டத்திற்குரிய காலடி வைப்பு முறைகளை பின்பற்றியுள்ளார். கத்தியை பயன்படுத்துவதில் எம்.ஜி.ஆர். தனித்தன்மையுடன் விளங்கினார். இரண்டு கைகளாலும் கத்தியைச் சுழற்றுவார். மாயா மச்சீந்திரா, நீரும் நெருப்பும், நினைத்ததை முடிப்பவன், மருதநாட்டு இளவரசி ஆகிய படங்களில் இரண்டு கைகளில் இரண்டு கத்தி வைத்து சண்டையிடுவார்.

பெரிய இடத்துப் பெண், தாயைக் காத்த தனையன், தாய்க்குப்பின் தாரம், முகராசி, விவசாயி, படகோட்டி போன்ற பல படங்களில் சண்டைக்காட்சிகளில் சிலம்பு சுற்றுவார். சிலம்பு



விவசாயி

என்பது ஒருவரது தலை உயரத்திற்கு இருக்கும் கம்பு ஆகும். இவ்வாறு இல்லாமல் சிறிய கம்பை வைத்து சுற்றுவது செடிக்குச்சு விளையாட்டு எனப்படும். செடிக்குச்சு விளையாட்டில் எம்.ஜி.ஆருக்கு நிகர் எம்.ஜி.ஆர் ஒருவரே. சில படங்களில் இரும்புக் குழாய் முதலானவற்றை சிலம்பு போல சுற்றி சண்டைக் காட்சிகளை அமைத்திருப்பார்.

எம்.ஜி.ஆர். தினமும் கடுமையான உடற்பயிற்சிகளை செய்து வந்ததனால் உறுதியான

உடலும், தெளிவான மனமும் பெற்றிருந்தார். **1950**ல் கோயம்புத்தூரில் சாண்டோ சின்னப்பாத் தேவரின் வீர மாருதி தேகப்பயிற்சி சாலையில் எம்.ஜி.ஆர்., நம்பியார், தேவர் ஆகியோர் தினமும் உடற்பயிற்சி பளு தூக்குதல் போன்றவற்றில் ஈடுபடுவர். மூவரிலும் எம்.ஜி.ஆரே அதிக பளு தூக்குவார். பளு தூக்குதல் மட்டுமின்றி மல்யுத்தத்திலும் எம்.ஜி.ஆர் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தார். சக்கரவர்த்தி திருமகள், காஞ்சித்தலைவன், அன்பே வா, காவல்காரன், பட்டிக்காட்டுப் பொன்னையா ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வீரனாக நடித்தார். எம்.ஜி.ஆருடன் நடித்த மல்யுத்த வீரர்கள் எம்.ஜி.ஆருக்கு மல்யுத்தம் தெரியாது, அவர் முறைப்படி படித்திருக்க மாட்டார் என்று ஏளனமாகக் கருதி அவரை முறைக்கேடாக தாக்கினர். இரண்டு மூன்று முறை பொறுத்துக் கொண்ட எம்.ஜி.ஆர். அவர்களிடம் சினிமா சண்டைப் போடாமல் நிஜமாகவே மல்யுத்த மோதலை



அன்பே வா

நிகழ்த்தி அவர்களை தூக்கி தோழில் வைத்து சுழற்றி கீழே வீழ்த்தினார். வெட்கப்பட்டவர்கள் எம்.ஜி.ஆரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். எம்.ஜி.ஆருடன் நடித்த ஸ்டண்ட் வீரர்கள் இச்சம்பவங்களைத் தங்கள் நூலில் எழுதியுள்ளனர்.

கத்தி, சிலம்புத் தவிர கோபுடா, மான் கொம்பு, சுருள் கத்தி போன்ற பாரம்பரிய சண்டைக் கருவிகளோடு எம்.ஜி.ஆர். சண்டையிடும் காட்சிகளை படங்களில் அமைத்தார். இக்காட்சிகள் இரசிகர்களிடையே பெரிய வரவேற்பினைப் பெற்றன. அரசிளங்குமரி படம் சில ஆண்டுகளாக தாமதமாகிக்கொண்டு வந்த போது படத்தின் இறுதிக் காட்சியில் சிறப்பான சண்டைக்காட்சி ஒன்றை வைக்க வேண்டும் என்று விரும்பிய எம்.ஜி.ஆர். சில ஆண்டுகள் தன்னோடு பேசாமல் இருந்த சாண்டோ சின்னப்பாத் தேவரை அழைத்துவந்து கோபுடா சண்டைக் காட்சியில் நடிக்க வைத்தார். கோபுடா என்பது சிறிய ஈட்டி சொருகியிருக்கும் இரும்பினாலான நீண்ட கையுறை. இதனைக் கையில் மாட்டிக்கொண்டு ஒருவரோடு ஒருவர் மோதும்போது ஈட்டிகள் எதிராளியின் உடம்பிலோ, முகத்திலோ காயம் ஏற்படுத்திவிடாமல் கவனமாக சண்டையிட வேண்டும். இதற்கு தேர்ச்சி பெற்ற வீரர்களே தேவை என்பதால் எம்.ஜி.ஆர்., சாண்டோ சின்னப்பாத் தேவரை தேர்ந்தெடுத்தார். பின்பு இருவரும் சமாதானமாகிவிட்டனர். அரசிளங்குமரி படமும் வெற்றி விழா கொண்டாடியது.

மானை வேட்டையாடி அதனுடைய கொம்புகளை எடுத்து ஒரு கைப்பிடியின் இரண்டு பக்கமும் சொருகி அதனை ஆயுதமாக பயன்படுத்தும்



உழைக்கும் கரங்கள்

பழக்கம் பண்டைக்காலத்தில் இருந்தது. எம்.ஜி.ஆரின் நாடக மன்றத்தில் நடித்து அவருடன் நெடுங்காலம் இருந்து வந்த திருப்பதி சாமியின் தந்தையார் பயன்படுத்திய மான் கொம்பைப் (மோடி) பெற்று உழைக்கும் கரங்கள் படத்தில் ஒரு சண்டைக் காட்சி அமைத்திருந்தனர். எம்.ஜி.ஆர். மான் கொம்பை வைத்திருக்க எதிராளிகள் சிலம்பை வைத்து சண்டையிடுவர். நீண்ட சிலம்புகளோடு எம்.ஜி.ஆர். தன்னுடைய சிறிய மான் கொம்புகளைக் கொண்டு மோதி வெற்றிபெறுவார்.

சுருள் கத்தி என்பது உலோகத்தால் ஆன பல மீட்டர்கள் நீளமுடைய சுருட்டி இடுப்பில் சொருகிக்கொள்ளும் ஒரு கருவியாகும். இத்தகைய சுருள் கத்தியைக் கொண்டு எம்.ஜி.ஆர். ரிக்ஷாக்காரன் படத்தில் கடைசி உச்சக்காட்சியில்

பலரோடு எதிர்த்து சண்டையிடுவார். சுருள் கத்தி சுழற்றும் போது அக்கத்தியின் நுனி தரையில் படக்கூடாது. அவ்வாறு சுழற்றுவதற்கு தனிப்பயிற்சியும், தேர்ச்சியும் தேவை. ரிக்ஷாக்காரன் படத்தின் படப்பிடிப்பு நடந்துக் கொண்டிருந்த வேளையில் அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நெருக்கடி நிலையை அறிவித்திருந்ததனால் படங்களில் சண்டைக் காட்சிகளுக்கு கட்டுப்பாடு நடைமுறைக்கு வந்தது. சண்டைக் காட்சிகள் வன்முறையைத் தூண்டுகின்றன என்று குற்றம் சுமத்தி தணிக்கையாளர்கள் அனுமதி தர மறுத்தனர். இதனால் எம்.ஜி.ஆரால் தன் படங்களில் ஆவேசமான சண்டைக்காட்சிகளை அமைக்க இயலவில்லை. அப்போது சண்டைக் காட்சிகளில் நடிக்கும் நடிகர்களுக்கு திரைப்பட வாய்ப்பு குறைந்துவிட்டது. எம்.ஜி.ஆர். மட்டும் அவர்களுக்கு வாய்ப்புகள் தர விரும்பி, தன்னுடைய படங்களில் அதிகமான எண்ணிக்கையில் ஸ்டண்ட் நடிகர்களை பயன்படுத்தினார். ஒருவருக்கொருவர் மோதலைத் தவிர்த்து கதாநாயகனை அடியாட்கள் பலர் வந்து தடுப்பது போல சண்டைக்காட்சிகளை அமைத்தார். இதனால் பலரும் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்று அவர்களுக்கு வருமானமும் கிடைத்தது. மற்ற நடிகர்கள் படத்தில் சண்டைக் காட்சிகள் அமைக்கப்படவில்லை.

‘நெருக்கடியான நிலையின் போது’ எம்.ஜி.ஆர். சுருள் கத்திச் சண்டையை அமைத்தார். நீளமான பெரிய மேஜையின் மேல் நின்று எம்.ஜி.ஆர். சுருள் கத்தியை சுழற்றுவார். அப்போது மேஜையை சுற்றி நிற்கும் எதிராளிகள் சுருள் கத்தியின் வீச்சுக்கு பயந்து நாற்காலிகளை தூக்கிக்கொண்டு வந்து எதிர்ப்பதாக

சண்டைக்காட்சி புதுமையாக அமைக்கப்பட்டது. முதன் முதலாக திரையில் எம்.ஜி.ஆர். சுருள் கத்தி சுழற்றுவதைக் கண்ட இரசிகர்கள் பெரும் ஆரவாரம் செய்தனர். அதேவேளையில் ஸ்டண்ட் நடிகர்களுக்கும் எம்.ஜி.ஆர். மூலமாக பட வாய்ப்பும், வருமானமும் கிடைத்தது. இதைத்தவிர வேறுபல கருவிகளையும் கொண்டு எம்.ஜி.ஆர். சண்டையிடும் காட்சிகளையும் படங்களில் காணலாம்.

தாய்க்கு தலைமகன் படத்தில் மெக்கானிக்காக நடிக்கும் எம்.ஜி.ஆர். தன் அண்ணனை ஏமாற்றி பணம் பறித்துச்சென்ற ஆர்.எஃப்.மனோகரிடம் பணத்தைத் திரும்பக் கேட்கும்போது அவர் தரமறுத்து சண்டையிடுவார். அவர் கட்டிடம் கட்டும் பொறியாளர் என்பதால் இச்சண்டைக் காட்சியில் கடப்பாரையைக் கொண்டு இருவரும் சண்டையிடுவர். தொழிலுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு சண்டைக்கருவிகளை தேர்ந்தெடுத்து சண்டைக்காட்சிகளை அமைப்பதில் எம்.ஜி.ஆர். வல்லவராகத் திகழ்ந்தார்.



பட்டிக்காட்டுப் பொண்ணையா

பட்டிக்காட்டுப் பொன்னையா படத்தில் சென்னைக்கு வரும் பட்டிக்காட்டானாக நடித்திருந்த எம்.ஜி.ஆர். அங்கு இரண்டு மூன்று பேர் ஒரு ஆளை அடித்துத் துன்புறுத்துவதைப் பார்த்து அடிபட்டவரை மீட்க களத்தில் இறங்குவார். அப்போது எம்.ஜி.ஆர். கையில் ஆயுதம் எதுவும் இருக்காது பட்டிக்காட்டாணாகிய அவர் தன் கழுத்தில் போட்டிருந்த துண்டை எடுத்து எதிராளிகளின் கைகளைக் கட்டியும் கழுத்தில் போட்டு முறுக்கியும் அவர்களை வீழ்த்துவார்.

இரசிகர்களின் மகிழ்ச்சி

சண்டைக் காட்சியில் நடிப்பதற்கேற்றபடி எம்.ஜி.ஆர். தன்னுடைய உடம்பைத் தகுந்த உடற்பயிற்சிகளால் முறுக்கேற்றியும் அதே சமயம் இளக்கமாகவும் வைத்திருந்தார். சண்டைக் காட்சிகளை அமைக்கும் போது திரையில் தெரியும் காட்சிகளையும் அதற்குரிய இரசிகர்களின்



படடிககாட்டுப் பொண்ணையா

எதிர்வினையையும் எம்.ஜி.ஆர். கருத்தில் கொண்டாரே அன்றி தனது திறமை, அறிவு, தொழில் நுட்பம் போன்றவற்றை வெளிக்காட்ட வேண்டும் என்று கருதவில்லை. சண்டைக் காட்சிகளை திட்டமிடும் போதும் இரசிகர்களின் ரசனைக்கும் மகிழ்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்தார்.

சண்டைக் காட்சிகளுக்கு வைக்க வேண்டிய கேமரா கோணங்களையும் எம்.ஜி.ஆர். ஆங்கிலப் படங்களைப் பார்த்துத் தெரிந்து கொண்டார். தன்னுடைய கேமரா தொழில்நுட்பம், மற்றும் எடிட்டிங் அறிவைக் கொண்டு எடுத்த காட்சிகளை அழகாகத் தொகுத்தார். தேவையற்ற காட்சிகளை நீக்கினார். தேவையானவற்றை ஆங்காங்கே சரியாகப் பொருத்தினார். இடையிடையே வலி, அதிர்ச்சி போன்ற உணர்வுகளை முகத்தில் காட்ட ‘க்ளோஸ் அப்’ காட்சிகளைச் சேர்த்தார். சக ஸ்டண்ட் நடிகர்களைத் தமது உடன் பிறப்புகளாகக் கருதி அவர்களின் பாதுகாப்பு மற்றும் இன்ப துன்பங்கள் ஆகியவற்றிலும் அக்கறைக் கொண்டார்.



சண்டைக்காட்சியின் தேவை

சண்டைக் காட்சி இல்லாத படங்களை எம்.ஜி.ஆர். விரும்பியதே இல்லை. அலிபாபாவும் நாற்பது திருடர்களும் படத்தில் சண்டைக் காட்சிக்கு கதையில் இடமே இல்லை. இருப்பினும் படத்தின் முடிவில் ஒரு சண்டைக் காட்சி வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இயக்குனரும்



தயாரிப்பாளருமான சுந்தரம் அவர்கள் ஒப்புக்கொள்ளாத போது படப்பிடிப்பு தாமதப்பட்டது. அப்போது எம்.ஜி.ஆர். அவரை நேரில் சந்தித்துப் பேசி அவரை ஒப்புக்கொள்ள வைத்தார். அப்படத்தில் வெற்றிக்கு இறுதி சண்டைக் காட்சி முக்கியப் பங்கு வகித்தது. அதுவே எம்.ஜி.ஆர். படம் என்ற முத்திரையை அளித்தது. எம்.ஜி.ஆர். திருடர்களை குதிரையில் விரட்டி செல்லுதல், குகைக்குள் நேருக்கு நேர் சண்டையிடுதல், குகையில் இருக்கும் ஆபத்துகள் ஆகியன இரசிகர்களை வெகுவாக கவர்ந்தன.

*அன்பே வா படம் கம் செப்டம்பர் என்ற ஆங்கிலப் படத்தின் தமிழாக்கம் ஆகும். அதில் சண்டைக் காட்சிக்கு இடமேயில்லை. இருந்தாலும் எம்.ஜி.ஆர். தனது படத்தின் இறுதிக் காட்சி பரபரப்பாக அமைய வேண்டும் என்று இயக்குனரிடம் உறுதியாக சொல்லிவிட்டார். அதன் பின்னர் சரோஜாதேவி கோபித்துக்கொண்டு வீட்டைவிட்டு காரில் வேகமாக செல்வதாகவும் அவரை எம்.ஜி.ஆர். தனது காரில் விரட்டிக்கொண்டு செல்வதாகவும் ஒரு கார் விரட்டும் காட்சி **[CAR CHASING]** சேர்க்கப்பட்டது. அதன் முடிவில் சிட்டிங் புல்லுடன் ஒரு சிறிய சண்டைக் காட்சியும் வைக்கப்பட்டது. படம் பார்த்த இரசிகர்கள் இப்படி வேகமாக சரோஜாதேவி போகிறாரே என்ன நடக்குமோ என்ற பதைபதைப்புடன் படம் பார்த்தனர். இறுதியில் வழக்கம் போல சுபமாக முடிந்தது. மக்கள் மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைந்தனர். இது தான் எம்.ஜி.ஆர். தன் படங்களில் இறுதி சண்டைக் காட்சி வைப்பதற்கான நோக்கம் ஆகும். மக்கள் நன்மை வெல்லும் தீமை அழியும்;*



அன்பே வா

நமக்கும் நல்வாழ்வு வரும் என்ற மன மகிழ்ச்சியுடன் வீடு திரும்ப வேண்டும்.

சண்டைக் காட்சிகள் இந்திய புராணங்களின் முடிவில் இடம் பெறும் ஓர் இன்றியமையாத அம்சம் என்பதால் மக்கள் இறுதியில் நன்மைக்கும் தீமைக்கும் மோதல் வரும் போது நன்மையே வெல்லும் என்ற நம்பிக்கையை பல நுற்றாண்டுகளாகப் பெற்றிருந்தனர். அந்நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் எம்.ஜி.ஆர். தம் படத்தின் இறுதியில் மிகப் பெரிய சண்டைக் காட்சியை அமைத்தார். தன் சொந்தப் படங்களில் தனது விருப்பம் போல அதிக செலவு செய்து சண்டைக் காட்சிகளைப் பிரம்மாண்டமாக அமைத்தார். நாடோடி மன்னனில் கழுகு குகை தண்ணீரில் மூழ்கும் காட்சி ஜோக் நீர் வீழ்ச்சியிலும் படப்பிடிப்பு நிலையத்திலும் எடுக்கப்பட்டு அழகாக இணைக்கப்பட்டது. அடிமைப் பெண்ணில் சிங்கத்துடன் சண்டைப் போடும் இறுதிக் காட்சி எம்.ஜி.ஆரும் சிங்கப்



அடிமைப் பெண்

பயிற்சியாளரும் தனித்தனியாக நடித்த காட்சிகள் அழகாக இணைக்கப்பட்டன. உலகம் சுற்றும் வாலிபனில் ஸ்கேட்டிங் விளையாடியபடி எம்.ஜி.ஆர். கத்திச் சண்டை போட்டு வரும் காட்சி பிரமிப்பூட்டியது. இதில் இவர் ஒருவரே நடித்திருந்தார். பல மாதங்கள் ஸ்கேட்டிங் பயிற்சி எடுத்து நடித்தார்.

நிறைவுரை

இந்திய வரலாறு நெடுகிலும், தமிழகத்திலும் நெடுங்கதைகளின் முடிவில் போர் காட்சிகள் அல்லது சண்டைக் காட்சிகள் இடம் பெற்றதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆரும் இலக்கிய இதிகாச பாரம்பரியத்தை மீறாமல் தனது படங்களிலும் சண்டைக்காட்சிகளை படம் நெடுகிலும் அமைத்தார். படத்தின் முடிவில் மிகப்பெரிய சண்டைக் காட்சியையும் அமைத்தார். அது படம் பார்ப்பவர்களுக்கு மிகுந்த பரபரப்பும், மனதில்


உற்சாகமும் ஏற்பட்டு கதாபாத்திரங்களோடு ஒன்றி போய்விடுவர். படத்தின் நல்லவன் வாழ்வான் கெட்டவன் அழிவான் என்ற கருத்து உண்மையாக வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆர்வமாக கடைசி சண்டைக் காட்சியை பார்த்து ரசிப்பர். சண்டைக் காட்சியை கிளைமாக்ஸ் காட்சியை என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டு. பெரும்பாலும் எம்.ஜி.ஆர். படங்களில் கடைசிச் சண்டைக் காட்சி நீண்டநேரம் நடைபெறுவதுண்டு. சண்டைக் காட்சியை அவர் ஆண்கள் மட்டுமே ரசிக்க கூடியதாக எடுக்காமல் பெண்களும், குழந்தைகளும் ஆர்வத்தோடு ரசிக்கக் கூடியதாக எடுத்திருந்தார். அவ்வாறு ரசனை ஊட்டுவதற்கான உத்திகளைப் பயன்படுத்தியது குறித்து இனிவரும் இயல்களில் காணலாம்.



உலகம் சுற்றும் வாலிபன்

2. கத்திச் சண்டை சுவாரஸ்யங்கள்

எம்.ஜி.ஆர். நாடகங்களில் நடிக்கும் போதே மக்கள் மேடையில் ரசிப்பதைக் கவனித்தார். பி யூ சின்னப்பா நாடக மேடையில் கத்திச் சண்டை போட்டு இரசிகர்களைக் கவர்ந்தார். அதனால் எம்.ஜி.ஆரும் கத்திச் சண்டைக் கற்பதில் ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் ஆங்கிலத்தில் வெளிவந்த எறால் பிளையின் நடித்த படங்களில் வரும் இரசிகர்கள் வெகுவாக ரசித்ததைப் போல எம்.ஜி.ஆரும் ரசித்தார். அவர் நடித்த the sea hawk [1940], the adventures of Robin Hood, [1937] கேப்டன் Blood [1935] ஆகிய படங்கள் அவரைக் கவர்ந்தன. அவர் தன்னுடைய ஆரம்ப காலப் படங்களில் சண்டைக் காட்சிகளுக்கென தனியாக ஸ்டன்ட் மாஸ்டர் நியமிக்கும் பழக்கம் இல்லாததால் அவரே தன்னை சிறப்பாக அமைத்துக்கொண்டார். இதனால் தமிழ்நாட்டின் சினிமா இரசிகர்கள் எம்.ஜி.ஆரை 'தமிழ் நாட்டின் எறால் ஃபிளைன்' என்று அழைத்தனர். பி யூ சின்னப்பா மற்றும் எறால் பிளைன் சண்டைக் காட்சி நுட்பங்களைக் கண்டு தெளிந்த எம்.ஜி.ஆர். தமது படத்தில் சிறப்பாக அமைத்து இளைஞர்களைக் கவர வேண்டும் என்று உறுதி பூண்டார்.



எம்.ஜி.ஆர். 1940 - 50களின் ஆங்கில நடிகர்களைப் போல தனது நெளிநெளியான தலைமுடியைப் பிடரி வரை வளர்த்திருந்தார். அது சங்கீதம் பாடும் பாகவதர் ‘கிராப்’ அல்ல. எறால் ஃபிலைன் போன்ற ஹாலிவுட் நடிகர்களின் ‘ஹேர்

ஸ்டைல்' ஆகும். உடைகளையும் காலணிகளையும் பெல்ட், தொப்பி, நகைகள் போன்றவற்றையும் ஆங்கிலப் படத்தின் கதாநாயகர்கள் பயன்படுத்தியிருப்பதை போல தெரிவு செய்து உடுத்தினார். அவருடைய நிறத்துக்கும் உடற்கட்டுக்கும் பொருத்தமாக இருக்கும் ஆடைகளைத் தெரிவு செய்து அவற்றை வடிவமைக்க ஆங்கிலப் பத்திரிகைகளின் படங்களைத் தனது தையற்காரரிடம் கொடுத்து அது போல வடிவமைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

கத்திச் சண்டை போடும் போது மேலே இருக்கும் சரவிளக்கு, சுவரில் பதிந்திருக்கும் விளக்குகளைத் தாக்குதல், பூ ஜாடிகளை தள்ளிவிட்டு எதிராளியின் கவனத்தைத் திருப்புதல், மேசை நாற்காலிகளை கவிழ்த்துவிடுதல், அதன் மூலம் தனக்குக் கிடைக்கும் நேரத்தில் அடுத்த நகர்வைத் திட்டமிடுதல், திரைச் சீலையைச் சுற்றிவிடுதல் அல்லது அறுத்தெறிதல். தூணைப் பிடித்தபடி சுற்றி வந்து தாக்குதல், படிக்கட்டில் இருந்து கீழே குதித்து உருளுதல், எதிராளி வீழ்ந்த பிறகு ஒரு வெற்றிப் புன்னகையுடன் அவனை விட்டு நீங்குதல், வெற்றி வீரனை மக்கள் தோளுக்கு மேலே தூக்கிகொண்டு வருதல் போன்ற காட்சிகள் ஆங்கிலப் படங்களில் காணக் கிடைத்தன. அவற்றை மிக அழகாக எம்.ஜி.ஆர். தமது படங்களில் பொருத்திக் காட்டினார். தனது திறமையை மட்டும் காட்டாமல் அதை மற்றவர்கள் ரசிக்கும்படி பல சுவையான விஷயங்களையும் சண்டைக் காட்சியில் சேர்ந்தார். படம் பார்ப்பவர்களுக்கு சில எதிர்பாரா இன்ப அதிர்ச்சிகளையும் அமைத்தார். பெண்கள், குழந்தைகளுக்கான நகைச்சுவை கதாபாத்திரங்களையும் சேர்த்தார்.

1950களில் - எச்சரிக்கை கத்தி மடல்

எம்.ஜி.ஆர். முதன்முதலில் ‘பஞ்ச்’ வசனம் பேசி மக்கள் மனதைக் கவர்ந்த படம் மர்மயோகி. இதில் அவர் வாயில் கத்தியுடன் அரண்மனை பால்கனியில் வந்து தோன்றி ராணியுடன் சவால் விடுவார். மேலும் ராணிக்கு ஒரு எச்சரிக்கை மடல் வரைந்து அதை கத்தியில் சுற்றி வைத்து ராணியின் மீது எறிந்துவிட்டு தன்னை பிடிக்க வந்தவர்களுடன் போரிட்டு மின்னலென மறைந்துவிடுவார். இது போல மதுரை வீரனிலும் கள்ளர்கள் எம்.ஜி.ஆர். வீட்டில் கத்தியுடன் எச்சரிக்கை ஓலை ஒன்றை இணைத்து வீட்டுக்குள் எறிந்து விடுவர். வெறும் ஓலையை எறியாமல் அதை கத்தியுடன் இணைத்து எறியும் போது அதன் உக்கிரம் அதிகமாகிறது. சில படங்களில் கத்தியை அல்லது குறுவாளை எம்.ஜி.ஆர். வீரத்தைத் தூண்டும் வகையில் காட்சி அமைய வேண்டும் என்பதற்காகவும் பயன்படுத்தினார்.



மர்ம யோகி

மணப்பெண்ணுக்காக கத்திச் சண்டைப் போட்டி

மகாதேவி, ஆயிரத்தில் ஒருவன், சக்கரவர்த்தி திருமகள், மீனவ நண்பன் போன்ற படங்களில் பெண்ணுக்காக ஒருவரோடு ஒருவர் போட்டி போடும் சண்டைக் காட்சிகள் அமைக்கப்பட்டன.

மகாதேவி

மகாதேவியில் சாவித்திரிக்காக நடக்கும் போட்டியில் எம்.ஜி.ஆருக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் சாவித்திரிக்கு அவரை திருமணம் செய்துகொள்ளும் ஆர்வம் இருந்ததால் கத்திச் சண்டை அவருக்கும் பி.எஸ். வீரப்பாவுக்கும் இடையில் நடந்தது. இதில் அங்கு ஒரு பெண் சிலையின் கையில் இருக்கும் மாலையை எடுக்க வேண்டும் என்பது போட்டியின் முடிவு என்று அக்காட்சியில் ஒரு சுவாரசியம் இருந்தது. அந்த மாலையை எம்.ஜி.ஆர். தனது வாளினால் லாவகமாக



மகாதேவி

எடுத்து இரசிகர்களின் கை தட்டலைப் பெறுவார். இப்படத்தில் வாள் சண்டையில் தோற்றுப்போன வேத நாயகராக நடித்த ஓ.ஏ.கே. தேவர் மகாதேவியை மணக்க முடியவில்லையே என்ற கவலையில் சந்நியாசியாகப் போய்விடுவார்.

ஆயிரத்தில் ஒருவன்

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை ஏலத்தில் எடுத்துச் சென்ற பிறகும், அவளை மறக்க இயலாமல் தவித்த நம்பியார் வாள் சண்டையிட்டு வெற்றி பெற்றவனுக்கு அப்பெண் உரிமை என்ற பலப்பரிட்சையில் இறங்குவார். இதில் எம்.ஜி.ஆரின் குறுவாளை நம்பியார்



ஆயிரத்தில் ஒருவன்

பறித்துக்கொண்டு சண்டை இடுவார். அதை எம்.ஜி.ஆர். மீண்டும் கைப்பற்றிக்கொண்டு ‘இது என் குத்துவாள் நீர் உம்முடையதை எடுத்துக்கொள்ளும்’ என்பார். நம்பியார் தீவின் தலைவன் என்பதால் அவர் தன் பெண்ணை அபகரிக்க வந்த நிலையிலும் நீ என்று ஏக வசனத்தில் பேசி அவரது மரியாதையைக் குறைக்காமல் [நீர்] என்றே பேசுவார்.

எம்.ஜி.ஆர். படத்தில் வசனங்கள் மிகவும் கவனமாக எழுதப்பட்டிருக்கும். வில்லனை போடா, வாடா என்று எம்.ஜி.ஆர். பேசுவது கிடையாது. உரிமைக்குரலில் மட்டும் டேய் துரைசாமி என்று நம்பியாரை அழைத்து பேசுவார். அதற்கு அவர் மீது வழக்கு போட்டு நீதிமன்றத்திற்கு வரவழைத்த திருப்பூர் திமுக பிரமுகர் துரைசாமியை எதிர்த்து விட்ட நேரடி சவால் என்று இரசிகர்கள் காரணம் கூறியதும் உண்டு. அவர் நிஜ வாழ்விலும் யாரையும் போடா, வாடா என்று பேசுவது கிடையாது. இந்த குத்துவாள் காட்சி சண்டையின் சுவாரஸ்யத்தை அதிகரித்தது.

அறைக்குள் இருந்து எல். விஜயலட்சுமி என்ன நடக்குமோ தன் கணவன் தோற்றால் நல்லது ஆனால் அவமானம் என்ற வேதனையுடன் பார்த்துக் கொண்டிருப்பார். ஜெயலலிதா ‘என்ன இது என்னை பணயப் பொருள் போல வைத்து இப்படி சண்டைப் போட்டு கொள்கிறார்கள். யார் வெற்றி பெற்றாலும் தனக்கு அதில் விருப்பமில்லை என்ற நிலையில் சோகமாக நிற்பார். இக்காட்சி சண்டைக்கு இடையில் காட்டப்படும் போது படம் பார்க்கும் பெண்கள் இந்த இருபெண்களுக்காகவும் அவர்களோடு சேர்ந்து கவலைப்படுவார்கள்.

எம்.ஜி.ஆர். வெற்றி பெற்று இருவருக்கும் நல்லது நடக்க வேண்டுமே என்ற ஆவலுடன் இச்சண்டைக் காட்சியை பெண்கள் ரசிப்பார்கள். இவ்வாறான இடைக்காட்சிகளை அமைத்து எம்.ஜி.ஆர். பெண்களையும் ரசிக்க வைத்துவிடுவார். இது போன்ற சிறு சிறு காட்சிகள் எம்.ஜி.ஆரின் சண்டைக்காட்சிகளை சுவாரஸ்யமாக்குகின்றன. இந்த உத்தி முறைகளை எம்.ஜி.ஆர். தன் படங்களில் செவ்வனே பயன்படுத்தினார்.

மீனவ நண்பன்

மீனவ நண்பன் படம் ஒரு சமூகப் படம். மன்னர் காலத்து படம் அல்ல. இப்படத்தில் லதாவை எம்.ஜி.ஆருக்கு திருமணம் செய்து கொடுப்பதா வேண்டாமா என்ற கேள்விக்கு விடை காணும் முயற்சியில் ஒரு வாள் சண்டை அமைந்தது. இதில் கரிசட்டி கட்டப்பட்டிருக்கும். உறியடி திருவிழாவில் நடப்பது போல அதை தன் வாளால் அடித்து உடைக்க வேண்டும். எம்.ஜி.ஆர். அந்தச் சட்டியை உடைக்க அந்த கரித் தண்ணீர் நம்பியார் முகத்தின் மீது



மீனவ நண்பன்

கொட்டும். இந்தச் சண்டை காலத்துக்குப் பொருந்தாத சண்டையாகத் தோன்றினாலும் இரசிகர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு அமைக்கப்பட்டது. எதார்த்த இயக்குனரான ஸ்ரீதர் படத்தில் இக்காட்சி அமைக்கப்பட்டதால் இது ஸ்ரீதர் படம் அல்ல எம்.ஜி.ஆர். படம் தான் என்பது உறுதி ஆயிற்று. ஆயிரத்தில் ஒருவனில் கடற்கரையில் நடந்த வாள் சண்டைக் காட்சியை போல இந்தப் படத்திலும் கடற்கரையில் இச்சண்டைக் காட்சி அமைந்தது என்றாலும் ஆயிரத்தில் ஒருவனில் இருந்த பரபரப்பு இதில் இல்லை.

ராஜராஜன்

ராஜராஜன் படத்தில் இளவரசியின் காதலைப் பெறுவதற்காக நம்பியார் இளவரசியின் காதலனான எம்.ஜி.ஆரை கொல்ல வேண்டும் என்பதற்காக அவரை வலு சண்டைக்கு இழுப்பார். இருவரில்



ராஜ ராஜன்

ஒருவரே இருக்க வேண்டும் என்ற முனைப்புடன் சண்டையிடுவார். இறுதியில் நம்பியார் தோற்றுப் போவார்.

அரசகட்டளை

அரசகட்டளை படத்தில் வேறொரு விதமான வாள் சண்டை அமைக்கப்பட்டது. இங்கு தனது இளவரசியை ஒரு திருடன் கவர்ந்து சென்று விட கூடாது என்ற நாட்டுப்பற்று மற்றும் ராஜ விசுவாசம் காரணமாக பெரியவர் நம்பியார் எம்.ஜி.ஆருடன் வாள் சண்டை இடுவார். இக்காட்சி பலவகையிலும் சுவாரஸ்யங்கள் நிரம்பியது. 1. புத்தம் புதிய புத்தகமே பாடல் காட்சியைத் தொடர்ந்து இடம்பெற்றது. அப்பாடல் காட்சிக்கு முன்பு இளவரசி அமுதாவாக நடித்த சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு ஒரு அழகிய தங்கச்சங்கிலியை பரிசளித்தார். அதில் அவரது தேசியச் சின்னம் பதக்கமாக இருந்தது. அந்தத் தேசிய சின்னம் எதிரியின் கையில் இருப்பதை பொறுக்காமல் நம்பியார் அந்த மாலையைப் பறிக்க வருவார். 2. பாட்டுக்காட்சி முடிந்ததும் எம்.ஜி.ஆர். அந்த தங்கச்சங்கிலியைத் தொட்டு பார்த்து ரசித்துக்கொண்டு போகும் போது நம்பியார் குறுக்கே வந்து வழிமறிப்பார். சண்டை ஆரம்பிக்கும் முன்பு இடம் பெற்ற வாசனக் காட்சி ரசனையானது.

முதலில் எம்.ஜி.ஆர். காதலில் வெற்றி கண்ட மகிழ்ச்சியில் வரும்போது நம்பியாருடன் நடக்கும் சண்டையில் அவர் மென்மையாக நடந்துகொள்வார். சிரித்தபடி பேசிக்கொண்டே சண்டைப் போடுவார். ‘உங்களுக்கு ஓய்வு தேவையா பெரியவரே. ஓய்வெடுத்துக்கொண்டு சண்டைப் போடுங்கள்; என்பார். ஆனால் நம்பியார் அந்த மாலையைப்

பறித்ததும் அவர் மீது கோபம் கொள்வார். இப்போது நம்பியார் 'இனி நமக்குள் பகையில்லை, நீ உன் வழியே போகலாம்' என்று அமைதியாகப் பேசுவார். ஆனால் எம்.ஜி.ஆர். பதற்றமைடைவார். அந்த மாலையைத் திரும்பப் பெற கடுமையாகப் போரிடுவார். ஆக்ரோஷமாகத் தாக்குவார். மாலையைக் கைப்பற்றும் சமயத்தில் சரோஜாதேவி வந்து சண்டையை நிறுத்துவார். இருவரிடமும் அமைதியாக ஒரு வரி வசனம் பேசி அவரவர் வழியே போகும்படி கேட்டுக்கொள்வார்.

அரசகட்டளை சண்டைக் காட்சிகளுள் எம்.ஜி.ஆரும் நம்பியாரும் மாலைக்காக சண்டையிடும் காட்சி பெண்களும் ஆண்களும் ரசிக்கத்தக்க வகையில் எடுக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். படங்களின் சண்டைக் காட்சிகளில் காதல், சோகம், வீரம், நகைச்சுவை என்ற நான்கு உணர்ச்சிகளும் கலந்து திட்டமிடப்பட்ட இது போன்ற சண்டைக் காட்சி வேறு எதுவும் கிடையாது. இக்காட்சி எம்.ஜி.ஆரின் அண்ணன் படம் என்பதால் எம்.ஜி.ஆர். பல நாட்கள் செலவிட்டு அருமையாக அமைத்திருந்தார்.

இரண்டு கையாலும் வாளெடுத்து சண்டைப் போடுதல்

நீரும் நெருப்பும் படத்தில் மணிவண்ணன், கரிகாலன் என்று இரட்டை வேடத்தில் நடித்த எம்.ஜி.ஆர். வாள் சண்டைப் போடும் போது ஒருவர் வலது கையாலும் மற்றவர் இடது கையாலும் வாள் பிடித்து சண்டைப் போடும் காட்சிகள் இடம்பெற்றன. அப்போது இரசிகர்கள் இச்சண்டைக் காட்சிகளை வெகுவாக ரசித்தனர். திரையரங்குகளில் இப்படத்துக்கு கூட்டத்தைக் கட்டுப்பட்டுத்த முதன்



நீரும் நெருப்பும்

முதலாக தமிழகத்தில் குதிரைப்படை பயன்படுத்தப்பட்டது. அப்போது நிருபர்கள் எம்.ஜி.ஆரிடம் இரண்டு கைகளாலும் வாள் பிடித்து சண்டையிடுவது பற்றி கேட்டனர். அதற்கு எம்.ஜி.ஆர். தான் மாயா மச்சிந்திரா படத்தில் இது போல இரு கைகளிலும் வாளைச் சுழற்றும் சண்டைக்காட்சிகளில் நடித்திருப்பதாகத் தெரிவித்தார்.

ஒற்றைக் கால் கத்திச் சண்டை

இரண்டு கைகளாலும் கத்தியைச் சுழற்றத் தெரிந்த எம்.ஜி.ஆர். எதிரியிடம் இருக்கும் கருவியைப் பொறுத்தே தனது கத்தியைக் கையாளுவார். தர்ம யுத்த முறைகளைப் பின்பற்றும் எம்.ஜி.ஆர். ஆயுதம் இல்லாதவனுடன் போர் செய்ய மாட்டார். அடிமைப்பெண் படத்தில் அசோகன் ஒரு கால் இழந்தவராக நடித்திருப்பார். அவருடன் மோதிடும் அப்பா எம்.ஜி.ஆர். தான் இரண்டு

கால்களுடன் சண்டை இட்டால் அது பாரபட்சமாக அமைந்துவிடும். அதனால் கிடைக்கும் வெற்றி முறையானதன்று என்ற அறக் கோட்பாட்டைக் கருதி தானும் ஒரு காலை மடக்கிக் கட்டிக்கொண்டு ஒற்றைக் காலுடன் அசோகனுடன் மோதுவார். இவர் வெற்றி பெற்று மக்களின் ஆரவாரத்துக்குப் பதிலளிக்க திரும்பியதும் தோற்றுப் போன அசோகன் தோல்வி வெறியால் ஈட்டியை எம்.ஜி.ஆர். முதுகுப்பக்கமாக எறிந்து அவரைக் கொன்று விடுவார். அசோகன் செய்தது அறமற்ற செயல். அதனால் அவர் கெட்டவர்.

எம்.ஜி.ஆரும் அசோகனும் மோதும் இச்சண்டை தரையில் நடத்தப்படாமல் வலை கட்டி அதன் மீது நடத்தப்படும். வலையின் மீது நடப்பதே கடினம். ஆனால் அதன் மீது ஒற்றைக் காலில் நின்று குதித்து சண்டைப் போடுவது மற்றவர்களால் நினைத்துப் பார்க்க முடியாத செயல். வலைக்கு கீழே கூர்மையான ஈட்டிகள் நடப்பட்டிருந்தன. வலையில்



அடிமைப் பெண்

இருந்து கால் பிசகி விழுந்தால் ஈட்டிகள் உடம்பைப் பதம் பார்த்துவிடும். நிற்கவும் இயலாது; விழவும் கூடாது என்ற சவாலுடனான இந்தச் சண்டைக் காட்சியைப் படத்தின் ஆரம்பக் காட்சியாக எம்.ஜி.ஆர். வைத்திருந்தார்.

அடிமைப்பெண் படத்தில் வந்த சிங்கத்துடனான சண்டைக் காட்சியைப் பார்த்து ரசித்த இந்தி நடிகர் ராஜ் கபூர் அப்படத்துக்கு ஃபிலிம் ஃபேர் விருது வழங்கிச் சிறப்பித்த மேடையில் இது போன்ற ஒரு படம் எடுப்பதை என்னால் நினைத்து கூட பார்க்க முடியாது என்றார். அவ்வாறு சவாலான சண்டைக் காட்சிகளை எடுப்பதில் இந்தியத் திருநாட்டில் எம்.ஜி.ஆருக்கு நிகர் எம்.ஜி.ஆர். மட்டுமே.

நிஜக் கத்தியா / அட்டை கத்தியா?

அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர். போல சண்டைக் காட்சிகளில் நடிக்க தெரியாத எதிரணியினர் அவரை ‘அட்டை கத்தி வீரர்’ என்று புரளியை கிளப்பிவிட்டனர். இது குறித்து நிருபர்கள் கேள்வி கேட்ட போது எம்.ஜி.ஆர். தெளிவாகப் பதிலளித்து அவர்களின் பொய் பிரச்சாரத்தை முறியடித்தார். அட்டையில் கத்தி செய்ய இயலாது. நாடக கம்பெனிகளில் மரத்தால் கத்தி செய்து வர்ணம் பூசி வைத்திருப்பதுண்டு. சினிமாவில் மரக்கத்தி பயன்படுத்த முடியாது. அதனால் நிஜக் கத்தியைத் தான் பயன்படுத்துகிறோம். அது எடை மிகுந்தது. அதனைத் தூக்கிச் சுழற்றுவதற்கு நல்ல உடல் திடம் வேண்டும் என்றார்.

எம்.ஜி.ஆர். நடிக்க வந்த ஆரம்ப காலங்களில் கத்திச் சண்டைக் காட்சி ஒன்றில் நடித்த போது அவரது விரல் செருகும் அளவுக்கு கத்தி கைப்பிடியில் போதிய இடம் இல்லாததால் விரல் சிவந்து கன்றிவிட்டது. அடிக்கடி விரலை வெளியே வைத்துக்கொண்டிருந்துவிட்டு பின்பு சண்டைக் காட்சியில் நடிக்கும் போது மட்டும் விரலைக் கைப்பிடிக்குள் விட்டுக் கொள்வார். இவ்வாறு அவர் சிரமப்பட்டு சண்டைக் காட்சிகளில் நடித்ததுண்டு.

நீரும் நெருப்பும் படத்தில் சண்டைக்காட்சியில் நடித்துக்கொண்டிருந்த போது தர்மேந்திராவும் ஹேமமாலினியும் அங்கு படப்பிடிப்பைக் காண வந்தனர். அப்போது தர்மேந்திரா எம்.ஜி.ஆர். வைத்திருந்த குத்து வாளைத் தொட்டுப் பார்த்துவிட்டு 'இது என்ன உண்மை கத்தியா? இவ்வளவு கூர்மையாக இருக்கிறதே' என்றார். எம்.ஜி.ஆர். சிரித்தபடி ஆமாம் என்றார். எம்.ஜி.ஆர். போல சண்டைக் காட்சியில் நடிக்கவும் அக்காட்சிகளை சிறப்பாக அனைவரும் கண்டு ரசிக்கும்படி அமைக்கவும் இந்தியாவில் வேறு எவரும் கிடையாது. அவர் படத்தில் ஸ்டண்ட் மாஸ்டராக இருந்த ஆர். என். நம்பியார் மற்றும் ஸ்டண்ட் ஆகியோர் எம்.ஜி.ஆருடன் சேர்ந்து சண்டைக் காட்சிகளைத் திட்டமிடுவர். அவரிடம் ஸ்டண்ட் நடிகர்களாக இருந்து சண்டைக் காட்சிகளில் நடித்தவர்கள் எம்.ஜி.ஆர். முதல்வரானதும் ஸ்டண்ட் மாஸ்டர்களாக மாறி தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் பணி புரிந்தனர்.



நீரும் நெருப்பும்

குத்தீட்டியை எறிந்து உதவிய இரசிகர்

ஒரு கையில் நீண்ட வாளும் மறுகையில் குறுவாள் அல்லது குத்து வாள் அல்லது குத்தீட்டி வைத்தபடி சண்டைக் காட்சிகள் பல படங்களில் இடம்பெற்றன. படத்தின் விளம்பரங்களிலும் இந்தச் சண்டைக் காட்சி படம் இடம்பெற்றது. இரசிகர்கள் இக்காட்சிகளை வெகுவாக ரசித்தனர். ஒரு படத்தில் [ஆயிரத்தில் ஒருவன்?] எம்.ஜி.ஆர். கையில் இருந்த கத்தி அவர் கையைவிட்டு தவறவும் படம் பார்த்துக்கொண்டிருந்த இரசிகர் ஒருவர் உணர்ச்சி மேலீட்டால் தன் இடுப்பில் செருகியிருந்த கத்தியை எடுத்து திரையில் தோன்றிய எம்.ஜி.ஆரை நோக்கி எறிந்து அவருக்கு கொடுத்து உதவ முனைந்தார். திரை கிழிந்தது. பிறகு படம் பார்க்க முடியாமல் அனைவரும் வீட்டுக்குத் திரும்பினர். இந்நிகழ்ச்சி எம்.ஜி.ஆர். படங்களில் வரும் சண்டைக் காட்சிகளில் இரசிகர்கள் தம்மை எம்.ஜி.ஆரோடு இணைவு

படுத்தி கொள்வதை விளக்குகிறது. மேலும் எம்.ஜி.ஆர். நல்லவராக இருப்பதால் அவர் வெற்றி பெற வேண்டும் என்ற நல்லெண்ணம், அறத்தின் பால் மக்களுக்கு இருந்த உறுதியான நம்பிக்கையையும் இச்செயல் எடுத்துக் காட்டுகிறது.

கத்திச் சண்டையில் எம்.ஜி.ஆரின் வேகம்

ஆரம்ப காலத்தில் சண்டைக்காட்சிக்கென தனி மாஸ்டர்கள் கிடையாது. கேமராமேனிடம் கோணங்களைச் சொல்லிவிட்டு எம்.ஜி.ஆரே தன் சக நடிகருடன் அந்தக் காட்சியை விளக்கி நடிக்க வேண்டும். மருத நாட்டு இளவரசியில் ஆரம்பத்தில் விவசாயியாக இருந்த எம்.ஜி.ஆருக்கு இளவரசி வி. என். ஜானகி கத்திச் சண்டை கற்றுத் தருவார். அவரை காளி மடத்தில் இருந்து காப்பற்றும் கடைசி காட்சியில் பத்திருபது பேருடன் பம்பரமாக சுழன்று சுழன்று எம்.ஜி.ஆர். சண்டையிடும் காட்சி இடம் பெற்றது. இரண்டு கையிலும் நீண்ட வாளை ஏந்தியபடி ஒரே சமயத்தில் பல பேருடன் மோதுவார். அப்போது நின்றும் குந்தியும் சுழன்றும் ஓடியும் தாவியும் அவர் சண்டையிட்டதால் இக்காட்சி விறுவிறுப்பாக அமைந்திருந்தது.

ரஞ்சனுடன் எம்.ஜி.ஆர். ஒரு படத்தில் சண்டைக் காட்சியில் நடித்த போது எம்.ஜி.ஆரின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் ரஞ்சன் தவித்தார். தன்னை காயப்படுத்த முயல்கிறார் என்று எம்.ஜி.ஆர். மீது புகார் அளித்தார். ரஞ்சனும் சிறந்த வாள் வீச்சுக்காரரர் தான் என்றாலும் எம்.ஜி.ஆரின் வேகம் அவரிடம் இல்லை. அவர் நின்று சண்டை போடுவார். எம்.ஜி.ஆர். வேகமாக நகர்ந்து கொண்டே சண்டை போட வல்லவர். நின்றும், நடந்தும், குதித்தும்,



தேடிவந்த மாப்பிள்ளை

ஓடியும், தாவியும் எம்.ஜி.ஆர். சண்டை போடுவதால் அவருடைய சண்டைக் காட்சி மற்றவர்களின் சண்டைக்காட்சிகளை விட விறுவிறுப்பாக இருந்தது.

கோபுடா கத்திச் சண்டை

அரசிளங்குமரி படம் பல ஆண்டுகளாக பல்வேறு காரணங்களால் தாமதமாகிக்கொண்டு வந்தது. இயக்குனர் எஸ்.ஏ.சாமியுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடும் ஒரு காரணம் ஆகும். அதன் பிறகு எம்.ஜி.ஆர். தானே இயக்கி அந்தப் படத்தை முடித்துத் தருவதாக ஒப்புக்கொண்டு படத்தின் கடைசிக் காட்சியில் ஒரு விறுவிறுப்பான சண்டைக் காட்சி வைக்க திட்டமிட்டார். படம் தன்னுடைய படம் என்பதை எப்போதும் மனதில் நிறுத்தி வைக்கும் எம்.ஜி.ஆர். படத்தின்

வெற்றியை மட்டுமே கருத்தில் கொள்வார். தன்னுடன் மோத ஒரு சரியான நபர் வேண்டும் என்று நினைத்தார். சண்டைக் காட்சி இதுவரை வேறு எந்த படத்திலும் இடம் பெறாத வகையில் புதுமையாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினார்.

சில ஆண்டுகளாக தன்னுடன் பேசாமல் இருந்த சாண்டோ சின்னப்பா தேவரை அரசிளங்குமரியில் சண்டைக் காட்சியில் நடிக்க வைக்க முடிவெடுத்தார். ஆள் அனுப்பி தேவரிடம் பேச வைத்தார். தன்னை அழைக்க வந்தவரிடம் சின்னப்பா தேவர் வர மறுத்துவிட்டார். வந்தவர் “நீங்கள் நேரில் வந்து எம்.ஜி.ஆரிடம் சொல்லிவிட்டு போங்கள்” என்றார். அந்த வார்த்தைக்கு மதிப்பளித்து தேவர் எம்.ஜி.ஆரைச் சந்திக்க வந்தார். தேவர் காரை விட்டு இறங்கியதும் எம்.ஜி.ஆர். அவரை அன்புடன் அணைத்து அழைத்துச் சென்று அவருடன்



அரசிளங்குமரி

தனிமையில் அமர்ந்து பேசி அவரது சம்மதத்தை பெற்றுவிட்டார்.

அரசிளங்குமரி படத்தில் சண்டைக் காட்சியில் நடிக்க தேவர் சம்மதித்ததும் சண்டைக்கருவி பற்றி எம்.ஜி.ஆர். சிந்தித்து கோபுடாவை பயன்படுத்துவது என முடிவெடுத்தார். கோபுடா என்பது முட்கள் பதித்த கை கவசம் போல் இருக்கும் ஒரு கருவி. இதனைக் கவனமாகக் கையாள வேண்டும் இல்லாவிட்டால் எதிரே இருப்பவரின் உடம்பைக் கிழித்துவிடும். எனவே தன் மீது அன்பும் அக்கறையும் கொண்ட தேவரை இச்சண்டைக் காட்சியில் நடிக்க வைத்தார். அவரும் தீவிர கவனமுடன் உரிய இடைவெளி விட்டு தாக்குதல் மற்றும் தடுப்புக்களை மேற்கொண்டு இக்காட்சியை வெற்றி பெறச் செய்தார்.

கத்தியுடன் ஸ்டில் விளம்பரம்

எம்.ஜி.ஆரின் படங்களை ஆண்களும் பெண்களும் அவரது விறுவிறுப்பான கத்திச் சண்டைகளுக்காகப் பார்க்கும் ஆர்வம் மிகுந்ததால் கத்தியுடன் அவர் காட்சியளிக்கும் படத்தை போட்டு ஸ்டில் விளம்பரம் வெளியிடும் வழக்கம் தோன்றியது. குலேபகாவலி, சர்வாதிகாரி, ஆயிரத்தில் ஒருவன் போன்ற படங்களின் விளம்பர ஸ்டில்களில் கத்தியுடன் காட்சியளிக்கும் படங்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு படத்திலும் அவர் வெவ்வேறு வகையில் கத்தியைப் பிடித்திருந்தார்.



கத்திச் சண்டையுடன் கூடிய காதல் காட்சி

எம்.ஜி.ஆர். விதவிதமாக பாடல் காட்சிகளையும் சண்டைக் காட்சிகளையும் வடிவமைப்பதில் கெட்டிக்காரர். அரசகட்டளை, குடியிருந்த கோயில் போன்ற படங்களில் வாள் சண்டையுடன் பாடல் காட்சியையும் இணைத்திருந்தார். குடியிருந்த

கோயிலில் காதல் பாட்டு காட்சி அதில் அவர் வாளோடு கதாநாயகியின் முன் தோன்றுவதும் இருவரும் வாள் கொண்டு போரிடுவதுமாக சில காட்சிகள் சேர்க்கப்பட்டன. கதாநாயகி குளிக்கும் போது சோப் எடுத்துத் தருவதற்குக் கூட எம்.ஜி.ஆர். தனது கூர்மையான வாளால் அதை எடுத்து தண்ணிரில் இட்டு கலக்கி நுரை வரச் செய்வார். காதலும் மோதலுமாக இக்காட்சி அமைக்கப்பட்டிருக்கும். பாடல் வரிகள் ஆரம்பிக்கும் போதே இக்காட்சியில் இருவர் கைகளிலும் கத்தி இருக்கும்.

ஆண் : உன் விழியும் என் வாளும் சந்தித்தால்

பெண் : உன்னை வெல்லும் மனம் துள்ளும் இன்பத்தால்

என்று கேள்வி பதில் பாணியில் இப்பாடல் அமைந்திருக்கும். அக்காலத்தில் ஒரு வார இதழ் இந்த வரிகளைக் கொண்டு ஒரு நகைச் சுவைத் துணுக்கு ஒன்று வெளியிட்டது. அதில்,

ஆண் : உன் விழியும் என் வாளும் சந்தித்தால்

பெண் : கண் குருடாகிவிடும்



குடியிருந்த கோயில்

என்ற வரிகள் இடம் பெற்று வாசிப்போரிடம் சிரிப்பை வரவழைத்தன.

மேடையில் சண்டைக் காட்சியும் நடனக் காட்சியும்

அரச கட்டளை படத்தில் எம்.ஜி.ஆர். பல புதுமைகளைச் செய்திருந்தார். அவரது அண்ணனின் சொந்தப் படம் என்பதால் அப்படத்தை அண்ணனும் தம்பியும் மாறி மாறி ஒரே காட்சியைப் படம் பிடித்தனர். மேடையில் புரட்சி பாடலை பாடி ஆடி வந்த அமுதாவை ஆட விடாமல் சில கயாவர்கள் தடுத்த போது எம்.ஜி.ஆர். அங்கு வந்து மேடையில் அவர்களுடன் வாள் சண்டை போட்டு அவர்களை கயிற்றால் கட்டியிழுத்து விஜயனுக்கு கீதோபதேசம் செய்த கிருஷ்ணரைப் போல எம்.ஜி.ஆர். தோற்றம் அளிப்பார்.

கத்தி முனையில் இசைக்குழுவினரைத் தடுத்து வைத்திருந்ததைப் பார்த்ததும் எம்.ஜி.ஆர். கத்திச் சண்டையிட்டு விடுவித்து இசைக்குழுவை இசைக் கருவிகளை மீட்ட வைப்பார், இவர்

"ஆடி வா ஆடி வா ஆடி வா

ஆடப்பிறந்தவளே ஆடி வா – புகழ்

தேடப் பிறந்தவளே பாடி வா

ஆடி வா ஆடி வா ஆடி வா

மயிலாட வான்கோழி தடை சொல்வதோ

மாங்குயில் பாட கோட்டான்கள் தடை சொல்வதோ

முயல் கூட்டம் சிங்கத்தின் எதிர் நிற்பதோ –அதன்

முறையற்ற செயலை நாம் வரவேற்பதோ –ஓ-ஓ-ஓ"

என்று பாடி ஆடல் மங்கை அமுதாவை ஆடும்படி ஊக்குவிப்பார். அதன் பிறகு அவர்

"உயிருக்கு நிகர் இந்த நாடல்லவோ அதன்

உரிமைக்கு உரியவர்கள் நாமல்லவோ

புயலுக்கும் நெருப்புக்கும் தடை போடவோ

மக்கள் தீர்ப்புக்கு எதிராக அரசாளவோ ஓ-ஓ-ஓ"

என்று தனது உரிமை கீதத்தை பாடியபடி ஆடுவார். மக்கள் கூட்டம் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரிக்கும். இவ்வேளையில் எம்.ஜி.ஆர். ஆடலரங்கத்தின் மேலே தாவி தாவி பறந்து போய்விடுவார். மக்களின் மிகுந்த வரவேற்பை பெற்ற பாடல். கத்திச் சண்டை போடும் போது நின்று சண்டையிடும் ஒருவனின் நெஞ்சின் மீதேறி, ஒரு கால் வைத்து அடுத்தவனுடன் சண்டை போடுவார். பிறகு அனைவரையும் ஒரே கயிற்றால் கட்டி குதிரைகளைப் போல ஒரு திசை நோக்கி நகர வைப்பார். இவர் நான்கு குதிரை பூட்டிய தேரில் வரும் ராஜகுமாரனைப் போல பாடி வரும் ஒரு காட்சி அமைத்திருப்பார். இது போன்ற புதுமைகளை அவர் தனது சொந்தப் படத்தில் செய்து காட்டுவது வழக்கம்.



அரச கட்டளை

3. எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளில் பெண்கள்

எம்.ஜி.ஆருக்கு இரசிகைகள் ஆதரவும் அதிகம் என்பதால் அவர் சண்டைக் காட்சியையும் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி அமைப்பது மரபு. ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண்ணின் தியாகமும் அன்பும் இருப்பது உண்மை என்பதை உறுதி செய்யும் வகையில் அவரது சண்டைக் காட்சிகள் அமைந்தன. அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற உயரிய கருத்துடன் எம்.ஜி.ஆர். படங்கள் எடுக்கப்படுவதால் பெண்கள் அறம் வெற்றி பெறும் நோக்கில் நடத்தப்படும் சண்டைகளை வரவேற்றனர். அவ்வமயம் வில்லன்களைத் திட்டித் தீர்த்தனர். பெண்கள் இடையிடையே வந்து போகும் காட்சிகள் உண்டு. மகாதேவி, ராஜா தேசிங்கு போன்ற சில படங்களில் பெண்கள் [சாவித்திரி, பானுமதி] வாளெடுத்துச் சண்டைப் போட்டதும் உண்டு. வில்லன்களை எதிர்த்து பேசி போராட்டம் நடத்தியதும் உண்டு. மருதநாட்டு இளவரசி, அடிமைப்பெண், நினைத்ததை முடிப்பவன் போன்ற படங்களில் கதாநாயகிகள் [வி.என்.ஜானகி, ஜெயலலிதா, லதா]

எம்.ஜி.ஆருக்குச் சண்டை சொல்லித்தரும் காட்சிகள் இடம்பெற்றன.

பிற்காலத்தில் வந்த நவரத்தினம். இதயக்கனி ஆகிய படங்களில் எம்.ஜி.ஆர். பெண்களை வில்லியாகவும் அமைத்திருந்தார். இதயக்கனியில் ஆண் வில்லனைப் போல மது புகைப்பழக்கத்தை உடைய வில்லியாக ராஜசுலோசனா வந்தார். ஆனால் அவருடன் எம்.ஜி.ஆருக்கு சண்டைக் காட்சி கிடையாது. நவரத்தினம் படத்தில் குமாரி பத்மினி எம்.ஜி.ஆருடன் சண்டை போடும் காட்சி இருந்தது. ஆனால் குமாரி பத்மினி தாக்க வரும் போது எம்.ஜி.ஆர். விலகிக் கொள்வார். அவர் பொத் பொத்தென்று கீழே விழுந்து சோர்ந்து போவார்.

மருதநாட்டு இளவரசி

காண்டிபன் என்ற ஏழை விவசாயியான எம்.ஜி.ஆரை மருத நாட்டு இளவரசி வி.என். ஜானகி கிராமத்துப் பெண் போல வந்து காதலிப்பார். எம்.ஜி.ஆருக்கு நீச்சல், கத்திச் சண்டை, சிலம்பு



மருது நாட்டு இளவரசி

எல்லாமே இளவரசி கற்றுத் தருவார். பாயந்த சுபாவத்துடன் இருந்த காண்டிபன் வீரனாக மாறி பின்னர் இளவரசியை மணமுடித்து நாட்டின் மன்னன் ஆவான். ஜானகியம்மாவுக்கு சிலம்பு விளையாடத் தெரியும். இராமாவரம் தோட்டத்தின் மாடியில், திருப்பதிசாமி அந்த வீட்டில் இருக்கும் சிறுமி முதல் பெரியவர்கள் அவரை அனைத்துப் பெண்களுக்கும் சிலம்பு சொல்லித் தந்தார்.

அடிமைப் பெண்

தனியறைக்குள் குழந்தை பருவம் முதல் கிடந்த இளைஞனான எம்.ஜி.ஆருக்கு மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை கற்றுத்தரும் ஜீவா என்ற கதாபாத்திரத்தில் ஜெயலலிதா நடித்தார். எம்.ஜி.ஆருக்குச் சண்டை கற்றுத்தர ஜெயலலிதா அவரைத் தண்ணீருக்கு அழைத்து வருவார். அப்போது எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவிடம் ஏன் தண்ணிரில் கற்றுத் தருகிறாய் என்பது போல பல கேள்விகளைக் கேட்பார். எனக்கு எதிரி யாரும்



அடிமைப் பெண்



முகராசி

இல்லையே என்று அப்பாவியாக பதிலளிப்பார். ஆனால் விரைவில் சண்டைகளைக் கற்றுக்கொண்டு அதிகாரிகளோடு கடுமையாக மோதுவார். இப்படத்தில் சண்டைக் காட்சிகள் அனைத்தும் புதுவிதமானவை.

முகராசி படத்தில் ஜெயலலிதாவுக்கு எம்.ஜி.ஆர். சிலம்பு சண்டை கற்றுத் தருவார். ஆனால் அதற்கு முன்பே அவருக்கு சிலம்பு விளையாட்டு கற்றுத் தந்திருக்கிறார் என்பதை ஸ்டண்ட் மாஸ்டர் சங்கர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

நினைத்ததை முடிப்பவன்

ரஞ்சித் என்ற கொள்ளைக்காரனாகவும், சுந்தரம் என்ற இசைக் கலைஞனாகவும் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்த படம் நினைத்ததை முடிப்பவன். இதில் ரஞ்சித்தாக சுந்தரம் நடமாட வேண்டும் என்ற ஒப்பந்தப்படி சுந்தரத்துக்கு ரஞ்சித் போல ஆங்கிலம், வாள் சண்டை போன்றவற்றை ரஞ்சித்தின் காதலியாக நடித்த நடிகை லதா சொல்லிக்கொடுப்பார். அப்போதும் அப்பாவியான சுந்தரம் சண்டை கற்றுக்கொள்ள மறுப்பார். பின்பு படத்தில் இவ் இருவருக்குமான ஒரு வாள் சண்டைக் காட்சியும் இருந்தது. ராமகிருஷ்ணன் என்ற ஸ்டண்ட் நடிகர் இன்னொரு எம்.ஜி.ஆருக்குப் பதிலாக [dupe] நடித்தார்.

நினைத்ததை முடிப்பவன் படம் இந்தியில் வெளிவந்த உண்மையும் பொய்யும் [சச்சா ஜூட்டா] என்ற படத்தில் தமிழாக்கம் ஆகும். இதில் எம்.ஜி.ஆர். இரு வேடமேற்று நடித்தார். ரஞ்சித்,



நினைத்ததை முடிப்பவன்

சுந்தரம் என்ற இரண்டு எம்.ஜி.ஆர்களும் வாள் சண்டையிடும் காட்சி அமைக்கப்பட்டது. இச்சண்டைக் காட்சி வீட்டுக்குள் நடக்கும் சண்டையாக அமைந்தது. அதனால் மேசை, சோபா, கட்டில் போன்றவற்றின் மீது இருவரும் ஏறிக் குதித்து ஓடி தாவி சண்டையிடும் முறையில் அமைக்கப்பட்டது. இரட்டை வேடக் காட்சிகளில் இராமகிருஷ்ணன் சங்கர் போன்றவர்கள் எம்.ஜி.ஆருக்கு டூப் போட்டு நடித்தனர். இக்காட்சியில் ரஞ்சித் எம்.ஜி.ஆரைக் காதலிக்கும் லதாவும், சுந்தரம் எம்.ஜி.ஆரின் தங்கை சாரதாவும் தத்தமக்கு வேண்டியவரின் வெற்றிக்காக பரபரப்போடு பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

படம் பார்க்கும் பெண்கள் சுந்தரம் எம்.ஜி.ஆரின் வெற்றிக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்கள். இப்படத்தில் சுந்தரம் எம்.ஜி.ஆர். எளிமையானவராக வெகுளியாக தேர்ந்த இசைக் கலைஞனாக காட்டப்பட்டிருப்பார். ரஞ்சித் கொள்ளைக்காரராக இந்த சமுதாயத்தை பழிவாங்கத் துடிக்கும் கெட்டவராக புகை மது போன்ற தீய பழக்கங்களுக்கு ஆட்பட்டவராக வருவார். இருவரின் கதாபாத்திரமும் முரண் பட அமைக்கப்பட்டது. இதனால் படம் பார்ப்போர் அபிமானம் சுந்தரத்துக்கே கிடைத்தது.

அண்ணா திமுகவும் பெண்களின் பங்கேற்பும்

எம்.ஜி.ஆர். திமுகவில் இருந்த வரை சண்டைக் காட்சிகளில் அல்லது உச்சக் காட்சிகளில் பெண்களின் பங்கேற்பு அதிகமாக கிடையாது. ஆனால் அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு சமூகத்தில் வில்லன் ஒருவனால் நடக்கும் அநியாயங்களைத்



மதுரை மீட்ட சுந்தர பாண்டியன்

தட்டிக் கேட்பதிலும் அவனை எதிர்த்துப் போராடுவதிலும் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்கதாயிற்று. 1972இல் அதிமுக கட்சி தொடங்கியதும் பெண் உறுப்பினர்களில் மூன்றாவது உறுப்பினராக பெயர் பதிவு செய்யப்பட்ட லதா வில்லனை எதிர்க்கும் காட்சிகளில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றார். இவர் அதிமுக பெண் ஆதரவாளரைப் போலவே நடித்தார். வில்லன் கருணாநிதி போல சித்தரிக்கப்பட்டதால் ஒவ்வொரு படமும் அதிமுகவின் பிரச்சாரப் படமாகவே அமைந்தது. பல்லாண்டு வாழ்க, உழைக்கும் கரங்கள், உரிமைக் குரல், மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் போன்ற படங்களில் லதாவின் கதாபாத்திர அமைப்பு தமிழ்நாட்டில் சமூக பிரக்ஞை உடையவராகவும் அரசியல் மாற்றத்தைக் கொண்டு வர துடிப்பவராகவும் அமைக்கப்பட்டது. இவரைப் போலவே பெண்கள் தங்கள் குரலை அரசியல் கணிப்பிலும் முடிவெடுப்பதிலும் உயர்த்தினர். ஒருமித்த உணர்வுடம் அதிமுகவுக்கு வாக்களித்து அரசியல் மாற்றம் வர முக்கிய காரணமாயினர்.

கதாநாயகியரின் இடையீடு

எம்.ஜி.ஆர். வில்லனுடன் ஆவேசமாக சண்டையிட்டுக்கொண்டிருக்கும் போது இடையிடையே கதாநாயகி அங்கு சண்டைக்குள் புகுவதும் எம்.ஜி.ஆர். அவரையும் காப்பாற்றி வெளியே விடுவதுமான காட்சிகள் படம் பார்க்கும் பெண்களை வெகுவாகக் கவர்ந்தன. சில வயது முதிர்ந்த பெண்கள் திரையரங்கில் எம்.ஜி.ஆர். சண்டையிடும் போது இடையூறாக இடையில் வரும் இந்த கதாநாயகியரைக் கடுமையாகத் திட்டுவதும் உண்டு.

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் பெண்ணைத் தூக்கிக்கொண்டு போக உங்கள் சட்டம் இடம் தராதே என்று நம்பியாரிடம் சொல்லும் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை ஒரு பெட்டியில் வைத்து கொண்டு போவார். அப்போது ஜெயலலிதா சண்டை வராமல் தடுக்க முனைவார். அதற்கு எம்.ஜி.ஆர். இரு பூங்கொடி சற்று விளையாடிவிட்டு வருகிறேன் என்பார். பெண்களால் மிகவும் ரசிக்கப்பட்ட வசனம் இது. அந்த சண்டைக் காட்சியில் ஜெயலலிதாவும் மாதவியும் இடையிடையே வருவார்கள். கப்பலில் நடக்கும் சண்டையிலும் ஜெயலலிதா மேல்தளத்துக்கு வந்து கால் தவறி கீழே விழுவார்.



ஆயிரத்தில் ஒருவன்

எம்.ஜி.ஆர். வந்து அவர் கையை பிடித்து தூக்கியவாறு சண்டை போடுவார்.

வேட்டைக்காரன், தாயை காத்த தனயன் போன்ற தேவர் எடுத்த படங்களில் விலங்குகள் தாக்க வரும் போது எம்.ஜி.ஆர். அவற்றைச் சுட்டுக்கொல்ல முயல்வார். அப்போது கதாநாயகிகளான சாவித்திரி, சரோஜாதேவி ஆகியோர் நடு நடுவில் பயந்து கத்துவார்கள். இவர்களின் கதறல் விலங்குகளால் ஏற்படும் அச்சத்தை பீதியை இன்னும் அதிகமாக்கும். திடிரென பின்னால் இருந்து எம்.ஜி.ஆரை விலங்குகள் தாக்க வரும் போது படம் பார்க்கும் பெண்களும் அலறுவார்கள். இவ்வாறு படம் பார்ப்போரிடம் ஒரு வித எதிர்பார்ப்பை உண்டு பண்ணி சண்டைக் காட்சிகளை எம்.ஜி.ஆர். சுவாரஸ்யமாக்குவார்.

சண்டைக் காட்சியில் பெண்களுடன் குழந்தைகள்

வேட்டைக்காரன், கன்னித்தாய், பெற்றால் தான் பிள்ளையா ஆகிய படங்களில் சண்டைக்காட்சியில் பெண்களுடன் குழந்தைகளும் இடம் பெறுவதால் காட்சி மீதான எதிர்பார்ப்பு பெண்களிடமும் அதிகமாகும். குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் சண்டை நடப்பதால் பெண்களிடம் அதிக பதட்டம் காணப்படும். குழந்தைகள் பயந்து அப்பா அப்பா என்று எம்.ஜி.ஆரைப் பார்த்து அலறும் போது படம் பார்க்க வந்த சிறுவர்கள் பதட்டத்துடன் இருப்பதுண்டு. குழந்தைகள் காப்பாற்றப்பட்டதும் எம்.ஜி.ஆர். மீது மிகுந்த அபிமானம் ஏற்பட்டுவிடுவதால் இவர்கள் பின்னால் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர்களாகி விடுகின்றனர்.



வேட்டைக்காரன்

இவ்வாறு எம்.ஜி.ஆர். ரசிகர்கள் பரம்பரையாக உருவாகின்றனர். எம்.ஜி.ஆர். ரசிகைகள் தங்களின் பிள்ளைகளை எம்.ஜி.ஆரை சுட்டிக்காட்டி வளர்ப்பதால் அவர்கள் சிறு வயது முதல் எம்.ஜி.ஆரையே தங்களின் முன் மாதிரியாகக் கொண்டு வளர்கின்றனர். எம்.ஜி.ஆரைப் போலவே இவர்களும் மது புகை பழக்கமின்றி வளர்கின்றனர். தங்கள் தாய்மாரையும் தெய்வம் போல போற்றுகின்றனர். இக்கருத்தை கள ஆய்வின் போது பெருமிதத்துடன் தெரிவிக்கின்றனர். இச் சிறுவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும் போது தங்கள் பிள்ளைகளை எம்.ஜி.ஆர். ரசிகர்களாகவே வளர்க்கின்றனர். இதனால் ஒரே குடும்பத்தில் சுமார் நான்கு தலைமுறையினர் எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இருக்கின்றனர்.

4. சிலம்புச் சண்டை

எம்.ஜி.ஆர். தன் இளம் வயது முதல் பல வகை சண்டைப் பயிற்சி பெற்றவர் என்பதால் அவரால் ஒரு வகை சண்டையை மட்டுமே செய்யாமல் வேறு பல சண்டைகளையும் சிறப்பாக செய்ய முடிந்தது. கத்தி சண்டை வரலாற்றுக் கதைகளுக்கு உதவியதை போன்று நாட்டுப்புற சமூகக் கதைகளுக்கு எம்.ஜி.ஆருக்கு சிலம்பு சண்டை உதவியது. கிராமத்து இளைஞர்கள் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர்களாக மாறியதற்கு எம்.ஜி.ஆர். படங்களில் இடம்பெற்ற சிலம்புச் சண்டைகளும் முக்கிய காரணம் ஆகும்.


வேளாண்மக்களின் வீர விளையாட்டு சிலம்பு

சிலம்பு என்பது வேளாண் சமுகத்தின் வீர விளையாட்டுக்களில் ஒன்றாகும். ஜல்லிக்கட்டு கிடாய் சண்டை சேவற்கட்டு போன்றன வயல்களில் அறுவடை முடிந்து மக்கள் ஓய்வாக இருக்கும் மாசி முதல் வைகாசி மாதங்களில் கிராமங்களில் நடைபெறும் விழாக்களில் நடைபெறும். [நகரங்களில் கோயில்களில் இக்காலகட்டத்தில் மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரை திருவிழா, வைகாசி



விசாகம் போன்றவை பௌர்ணமி நாளன்று கொண்டாட்டப்படும்]. கிராமங்களில் இளைஞர்கள் சிலம்பு சுற்றுவதை சிலம்பாட்டம் அல்லது சிலம்பு விளையாட்டு என்றே அழைப்பர். இதனை வீர விளையாட்டு என்று கூறி பலரும் இதில் ஈடுபட்டு மகிழ்வர். ஒவ்வொருவரும் தனது உயரத்துக்கு சரியான அளவில் சிலம்பு குச்சியை வீட்டில் தனியாக வைத்திருப்பதுண்டு. எம்.ஜி.ஆர். சிலம்பாட்டத்தில் நல்ல தேர்ச்சி பெற்றவராக இருந்ததால் அவர் படங்களில் சிலம்பாட்டத்தின் அழகையும் நுட்பத்தையும் ரசித்த இளைய சமுதாயம் அவரைத் தங்களில் ஒருவராக கருதி மகிழ்ந்தது.

சிலம்பில் தனது உயரத்துக்குச் சமமான கம்பு, செடிக் குச்சி எனப்படும் பாதி அளவிலான கம்பு மற்றும் உலோகக் கம்பி ஆகியவற்றை கொண்டு எம்.ஜி.ஆர். சிலம்புச் சண்டைகளை அழகாக தந்து படங்களில் வடிவமைத்தார். ஸ்டண்ட் மாஸ்டரும்



மாட்டுக்கார வேலன்

ஸ்டண்ட் நடிகர்களும் அவரது திரை நுட்பத் திறன் கண்டு ஒவ்வொரு படத்திலும் வியந்து பாராட்டியபடி மகிழ்ச்சியாக அவருடன் பணியாற்றினர். ராமகிருஷ்ணன், சங்கர், சந்திர குமார் ஆகியோர் எழுதிய நூல்களும் சாகுல் அமீர் அவர்களின் பேட்டியும் மேடை பேச்சும் இவர்கள் எம்.ஜி.ஆருடன் மகிழ்ச்சியாக இருந்த காலங்களைக் காட்டுகின்றன. எம்.ஜி.ஆர். பல படங்களில் சிலம்பு சண்டைக் காட்சிகளை அமைத்தார். எனினும் மருத நாட்டு இளவரசி, தாயைக் காத்த தனயன், பெரிய இடத்து பெண், விவசாயி, மாட்டுக்கார வேலன் [உலோகக் கம்பி], ரிக்க்ஷாக்காரன் போன்ற படங்களில் மிகச் சிறப்பாக அமைந்திருந்தன.

எம்.ஜி.ஆர். ஒற்றை ஆளாக பலரோடு மோதும் சண்டை

மருத நாட்டு இளவரசியில் இரட்டை கத்தி சண்டைக் காட்சியில் சுழன்று சுழன்று சண்டை

இட்டதைப் போன்று சிலம்பு சண்டையும் இரண்டு கம்புகளைக் கொண்டு செய்திருப்பார். எம்.ஜி.ஆர். சுற்றும் வேகத்துக்கு சுற்றி இருப்பவர்களால் ஈடு கொடுக்க முடியாது. அவருக்கு வலது கை சுழற்றும் வேகத்துக்கு இடது கையும் சுற்றும். இதனால் எதிராளிகள் திணறிப் போவார்கள்.

தாயைக் காத்த தனயனிலும் வயலில் எடுக்கப்பட்ட சண்டைக்காட்சியில் பலரோடு எம்.ஜி.ஆர். மோதுவார். விவசாயி படத்தில் நம்பியாரோடு ஒற்றைக்கு ஒற்றை மோதும் காட்சியில் மிகப் பெரிய மூங்கில் கழி கொண்டு இருவரும் சண்டை இடுவார்கள். பின்னணி இசை ஆக்ரோஷமாக இவர்கள் மோதுவதாக காட்டி படம் பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கும். சண்டைக் காட்சிகளில் எம்.ஜி.ஆர். படங்களில் இசை முக்கிய பங்கு வகிப்பதைக் காணமுடியும். கத்தி உலோகத்தால் ஆனது என்பதைக் காட்ட அவை மோதும் போது ஒரு வகை ஓசையும் சிலம்பு மரத்தின் குச்சி என்பதை காட்ட அதற்கேற்ப தனி ஓசையும் சேர்க்கப்பட்டு சண்டை நடப்பதால் ஏற்படும் சத்தம் தத்ரூபமாக உணர வைக்கப்படும்.



விவசாயி

சதி செய்து தோற்கடித்தல்

பெரிய இடத்துப் பெண் படத்தில் சண்டையில் எம்.ஜி.ஆர். தோற்க வேண்டும் என்பதற்காக நாகேஷ் மயக்க மருந்தை சோடாவில் கலந்து குடிக்க கொடுத்து விடுவார். இந்த சதியை உணராததால் எம்.ஜி.ஆர். தோற்றுப் போவார் அவர் திருமணம் செய்யவிருந்த மணிமாலாவை அசோகன் திருமணம் செய்வார். இந்தச் சண்டை விளையாட்டை எம்.ஜி.ஆர். மிகுந்த தன்னம்பிக்கையுடன் விளையாட்டாக செய்வது போன்று செய்திருப்பார். ஏனெனில் அவரது மாமா சண்டை வாத்தியார். மணிமாலாவுக்கு எம்.ஜி.ஆர். மீது விருப்பம் உண்டு. எனவே, எப்படியும் ஜெயித்துவிடலாம் என்ற அதீத தன்னம்பிக்கையுடன் சூது வாது பற்றி அறியாத வெள்ளை உள்ளத்தோடு சண்டையிடுவார். ஆனால் மயக்க மருந்தால் தலை சுற்றி தோற்றுப் போவார்.

தாயைக்காத்த தனையன் படத்திலும் தேவருடன் எம்.ஜி.ஆர். மோதுவார். அந்தப் படத்தில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் தனித்தனியாக திருவிழா பார்க்க வந்திருப்பார்கள். அங்கு கூட்டத்தில் ஆளுக்கொரு பக்கமாக நின்று கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்தபடி திருவிழா வேடிக்கைகளைக் கண்டு களிப்பார்கள் அப்போது எம்.ஜி.ஆர். வெற்றிலை பாக்கு போடுவார். சரோஜாதேவி முறுக்கு திண்பார். திடீரென அசோகனின் சவாலை ஏற்று எம்.ஜி.ஆர். தேவருடன் சிலம்பமாடுவார். அந்தச் சண்டையும் விளையாட்டு சண்டையாகவே எம்.ஜி.ஆருக்குத் தோன்றும். ஆனால் சரோஜாதேவி மீது ஒருதலைக்காதல் கொண்ட அசோகன் கடுகடுத்த முகத்துடன்

சண்டையில் வெற்றி பெற்று விட வேண்டும் என்ற வெறியுடன் மோதுவார்.

சண்டைக் காட்சியில் கிராமிய விருந்தோம்பல் பண்பு

தேவரிடம் சிலம்பு சுற்றி எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றதும் அவருக்கு எம். ஆர். ராதா மாலை அணிவித்து மரியாதை செய்வார். கந்த விலாஸ் காபி கடையில் வந்து ஒரு கப் காபி சாப்பிட வேண்டும் என்று அன்புடன் அழைப்பு விடுப்பார். இதுவும் கிராமத்து விருந்தோம்பல் பண்பைக் காட்டும். பின்னர் வந்த கரகாட்டக்காரன் படத்தில் புது ஆட்டக்காரர்களை வீட்டிற்கு அழைத்து ஊர் ஆட்டக்காரரான சண்முக சுந்தரம் காபி வாங்கி வந்து கொடுத்து உபசரிப்பார். அவர்களை வெற்றிலை பாக்கு போடும்படியும் கேட்டுக்கொள்வார். காபி வெற்றிலை பாக்கு கொடுத்து உபசரிக்கும் கிராமியப் பண்புகளும் எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளில் இடம் பெறுவதைக் காணலாம். சண்டை நடக்கும்போது வேடிக்கை



தாயைக் காத்த தனயன்

பார்ப்போரின் ஆர்வமும் படத்தைப் பார்ப்பவர்களின் ஆரவாரமும் ஒன்று போலிருக்கும்.

மாட்டுக்கார வேலனில் உலோகக் குழாயில் சிலம்பாட்டம்

சிலம்பு என்பது மரத்தின் குச்சி அல்லது கொம்பு ஆகும். ஆனால் எம்.ஜி.ஆர். மாட்டுக்கார வேலன் படத்தில் கடைசி [கிளைமேக்ஸ்] சண்டைக் காட்சியில் அசோகனின் இடத்துக்குள் நுழைந்து அங்குக் கட்டிப் போட்டிருந்த வக்கீல் ரகுவை விடுவிக்கும் முயற்சியில் அங்குக் கிடந்த உலோகக் குழாயை எடுத்து அசோகனின் அடியாட்களுடன் சண்டை போடுவார். அவர் மாடு மேய்க்கும் கிராமத்தான்; அவருக்குக் கம்புச் சண்டை தெரியும் இங்குக் கம்பு எதுவும் இல்லை; மாறாக 'பைப்'கள் கிடக்கின்றன. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற அடிப்படையில் அவர் அந்த 'பைப்'களை எடுத்து சுழன்று சுழன்று சண்டை இடுவார்.

[இந்தச் சண்டையை ரசித்து பார்த்த எனது அமெரிக்க தமிழ் மாணவர் வக்கீல் ஜோர்டான்



மாட்டுக்கார வேலன்

பலமாகக் கை தட்டி ஆரவாரம் செய்தார். அன்றைக்கு திரை அரங்கில் இருந்தவர்கள் இவரை திரும்பிப் பார்த்து ஆரவாரித்தனர். எம்.ஜி.ஆர். மேலே இருந்த பைப்களில் இரண்டு கால்களாலும் தாவி அவற்றிற்கிடையே உருண்டு சுழன்று வந்து சண்டை போட்டது இவருக்கு மிகவும் வியப்பாக இருந்தது. ஹாலிவுட் படங்களில் கூட இப்படி நடிகர் நிஜமாகச் சண்டை போட்டதைப் பார்த்ததில்லை. அங்கு தொழில்நுட்பம் அதிகம் என்று சொல்லி பாராட்டினார்].

ரிக்க்ஷாவில் கம்பு சண்டை

எம்.ஜி.ஆர். படத்துக்கு படம் பாட்டுக் காட்சிகளில் புதுமை புகுத்த வேண்டும் என்று கருதுவதைப் போல சண்டைக் காட்சிகளிலும் புதுமையை விரும்புவார். இதை உணர்ந்த ஸ்டண்ட் மாஸ்டர் சங்கர் ரிக்க்ஷாக்காரன் படத்தில் ரிக்க்ஷாவில் இருந்தபடியே போடும் கம்பு சண்டையை வடிவமைத்தார்.



ரிக்க்ஷாக்காரன்

5. சண்டைக் காட்சிகளில் கட்சி பிரச்சாரப்பாட்டு

எம்.ஜி.ஆர். தனது படங்களில் பாட்டுக் காட்சிகளுக்கும் சண்டைக் காட்சிகளுக்கும் முக்கிய இடம் அளித்தார். மக்களின் மன இறுக்கத்தைத் தளரச் செய்து அவர்களுக்கு டோபோமின் சுரப்பை அதிகரிப்பது பாட்டுகள். சண்டைக் காட்சிகள் அவர்களுக்குள் இருந்த வீர உணர்வையும் தன்மான உணர்வையும் தட்டி எழுப்ப வல்லது. அதனால் அவர்கள் வெற்றியாளராக உணர்ந்து இன்புறுகின்றனர். எனிவே பாட்டு, சண்டை இரண்டும் எம்.ஜி.ஆர். படத்தில் அவரது நேரடி கண்காணிப்பில் எடுக்கப்பட்டுள்ளன. வசனங்களுக்கும் அவர் இத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுத்தார். பாட்டையும் சண்டையையும் ஒரே காட்சியில் இணைத்தும் படமெடுத்தார்.

காதல் பாடல்களில் சண்டைக் காட்சிகளைப் புகுத்திய எம்.ஜி.ஆர். தத்துவ பாடல்களிலும் சண்டைக் காட்சிகளைப் புகுத்தி மக்களுக்கு நல்ல

கருத்துக்களை எடுத்துரைத்தார். இவை அவர் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்தின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் பிரச்சாரப் பாடல்களாக அமைந்தன.

மன்னாதி மன்னன், எங்கள் தங்கம், நீரும் நெருப்பும், மீனவ நண்பன் மற்றும் தெய்வத்தாய் படங்களில் பாட்டுக் காட்சிகளுக்கு இடையில் சண்டைகள் வரும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் வேறுபட்டிருக்கும். இவற்றில் தெய்வத்தாய், எங்கள் தங்கம், மீனவ நண்பன் ஆகிய படங்களில் பாடல்களின் பின்னணி இசையின் போது சண்டைக் காட்சிகள் இடம்பெறும். பாடல் வரிகள் எம்.ஜி.ஆரின் மனத் துணிவையும் மக்கள் அவர் மீது கொண்டிருந்த அன்பையும் அவர் சார்ந்திருந்த இயக்க வரலாற்றையும் அதன் சிறப்பையும் எடுத்துரைக்கும். மீனவ நண்பன் படத்தில் திமுக தன்னை வெளியேற்றியதையும் அதனை கண்டு தான் அஞ்சவில்லை நேருக்கே நேர்



மீனவ நண்பன்

தேர்தலில் சந்திக்க தயார் என்ற சவாலையும் விடும் வகையில் பாட்டு எழுதப்பட்டிருக்கும்.

மூன்று எழுத்து திமுகவா எம்.ஜி.ஆரா?

தெய்வத்தாய் படத்தில் தன்னை வீட்டுச் சிறையில் அடைத்தவர்கள் முன்பு எம்.ஜி.ஆர். தன் காலுறைக்குள் மறைத்து வைத்திருந்த துப்பாக்கி பத்திரமாக இருப்பதை உறுதி செய்துகொண்ட பின்பு மூன்றுஎழுத்தில் என் மூச்சிருக்கும் என்ற பாடலைப் பாடி திமுக என்ற மூன்று எழுத்து பெயருடைய இயக்கமே தனது உயிர் என்று சொல்லி தன் இயக்கத்தின் சிறப்புக்களைப் பாடுவார். திமுகவினரால் பெரிதும் விரும்பப்பட்ட இப்பாடல் அவர் திமுகவை விட்டு வெளியற்றப்பட்ட பின்பு எம்.ஜி.ஆர். என்ற மூன்று எழுத்தில் எங்கள் உயிர் இருக்கும் என்று ரசிகர்கள் பாடியபடி அண்ணா திமுகவில் இணைந்தனர். இது அண்ணா திமுக பிரச்சாரப் பாடலாக மாறியது.

“மூன்று எழுத்தில் என் மூச்சிருக்கும் –அது

முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்

உள்ளம் என்றொரு ஊரிருக்கும் – அந்த

ஊரில் எனக்கொரு பேர் இருக்கும்”

என்ற பல்லவி அவர் மறைந்து 33 ஆண்டுகளான பிறகும் மக்கள் உள்ளம் என்ற ஊரில் அவர் நிரந்தரமாக வாழ்கின்றார் என்பதற்கான முன்னோட்டமாக அமைந்தது.

இப்பாட்டில் எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ்காரரர்கள் பதவிக்கு வந்ததும் பணிவில்லாமல்



தெய்வத்தாய்

நடந்துகொள்வதை கண்டித்திருப்பார். அந்த வரிகள் அடுத்து திமுக, பிறகு அண்ணா திமுக ஆட்சிக்கு வந்த போதும் அவர்களுக்கு வழங்கிய அறிவுரையாக அமைந்தது. சண்டைக் காட்சிக்கும் இந்த வரிகளுக்கும் தொடர்பில்லை என்றாலும் சண்டைக் காட்சியை சுவாரசியமாக்க அவர் இத்தகைய பொது கருத்துக்களை அங்கு இடையே புகுத்துகிறார்.

“வாழை மலர் போல பூமி முகம் பார்க்கும்

கோழை குணம் மாற்று தோழா

நாளை உயிர் போகும்; இன்று போனாலும்

கொள்கை நிறைவேற்று தோழா”

என்ற அடுத்த சரணம் தொண்டர்களுக்குரிய அறிவுரையாக அமைந்தது. காவல்துறை அதிகாரி கதாபாத்திரம் ஏற்று இப்படத்தில் நடித்த எம்.ஜி.ஆர். அங்கிருக்கும் கொள்ளைக் கூட்டத்து ஆட்களிடம் ‘அச்சம் தவிர் கொள்கை நிறைவேற்று’ என்று பாடும் காட்சி ரசிகர்களுக்கானது என்பது படம் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

கடைசியில் அவர்களுடன் மோதி அவர்களை உள்ளே சிறைப்படுத்திவிட்டு எம்.ஜி.ஆர். தப்பித்து விடுவார். இடையில் அவர் மூட்டைகளின் மீதேறி ஜம்மென்று படுத்தபடி அங்கிருந்து மூவரின் கைகளில் தாவி படுத்தபடி பாடுவது ரசிகர்களுக்கு ரசனையான காட்சி ஆகும்.

திமுக தலைவர்களின் கதைகள்

எங்கள் தங்கத்தில் திமுக தலைவர்களின் வரலாறு பற்றி ஒரு பாட்டில் எடுத்துக் கூறப்படும். நான் செத்துப் பிழச்சவண்டா என்ற பாட்டில் வலியுடன் எம்.ஜி.ஆர். சொல்லி திமுகவின் தலைவர்களான அண்ணா மற்றும் கலைஞர் குறித்து வாலியிடம் எழுதச் சொல்லி அதனை சண்டைக் காட்சியுடன் சேர்த்தார்.

“ஓடும் ரயிலை இடை மறித்து

அதன் பாதையில் தனது தலைவைத்து

உயிரையும் துரும்பாய் தான் மதித்து

தமிழ்ப் பெயரைக் காத்த கூட்டமிது”

என்ற வரிகள் கருணாநிதியின் ரயில் மறியல் போராட்டம் குறித்ததாகும். இப்போராட்டம் குறித்து வனவாசம் நூலில் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

“சந்தனப் பெட்டியில் உறங்குகிறார் –அண்ணா

சரித்திரப் புகழுடன் விளங்குகிறார்

எதையும் தாங்கும் இதயம் கொண்டு – அண்ணன்

எங்களை வாழ்ந்திடச் சொன்னதுண்டு

அண்ணா அன்று நல்ல நல்ல கருத்து

அழகுத் தமிழில் சொல்லி சொல்லி கொடுத்து

வளர்ந்த கூட்டமாடா – எதிர்த்தால்

தெரியும் சேதியடா”

என்ற இரண்டு சரணங்களும் அண்ணாவைப் பற்றியவை. அண்ணாவின் இறுதி மரியாதைக் காட்சிகளும் இப்பாட்டில் காணப்படும்.

நான் செத்துப் பெழச்சவண்டா எனத்தொடங்கும் பாட்டு உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் இருந்து பிழைத்து வந்ததைக் குறிக்க எழுதப்பட்ட பாடல் ஆகும். முதல் முறை நாடக மேடையில் சண்டைக் காட்சியின் போது குண்டு கருப்பையா எம்.ஜி.ஆரின் காலில் விழுந்துவிட்டதால் அவர் கால் எலும்பு முறிந்துவிட்டது. உடனே அவரை சென்னைக்கு கொண்டு வந்தனர். மதுரை பாலமேடு கிராமத்தைச் சேர்ந்த எலும்பு நல சிகிச்சை மருத்துவர் நடராசன்

எம்.ஜி.ஆருக்கு சிகிச்சை அளித்து நீச்சல் பயிற்சி எடுக்கும்படி அறிவுறுத்தினார். எம்.ஜி.ஆர். தனது வீட்டிலேயே நீச்சல் குளம் கட்டி தினமும் நீச்சல் பயிற்சி செய்து கால்களுக்கு உரமேற்றினார்.

அடுத்த முறை சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு எம். ஆர். ராதா எம்.ஜி.ஆரை அவர் வீட்டில் வைத்து தனது துப்பாக்கியால் சுட்டார். அப்போது குண்டு தொண்டைக்கும் காதின் பின்புறத்துக்கும் இடையில் சிக்கியது. அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் அவருக்கு அறுவை சிகிச்சை நடந்தது. அவர் பிழைத்துக்கொண்டார். எனவே எம்.ஜி.ஆரை அவரது ரசிகர்கள் செத்துப் பிழைத்தவர் என்று சொல்லி மகிழ்ந்தனர். அதுவே பாட்டின் முதல் வரியும் ஆயிற்று. இக்காட்சியில் தன்னை கொல்ல வந்தவர்களிடம் தனது இயக்க வரலாற்றைப் பாட்டாக பாடி சண்டை போடுவார். தான் இயக்கத்தில் வளர்ந்த விதம் தன்னை வளர்த்தவர்களின் வீரம் ஆகியவற்றை எடுத்துச் சொல்லி தான் எதையும் தாங்கும் இதயம் கொண்டவன் எதற்கும் அஞ்சாதவன் மனம் சோர்ந்து போகாதவன் என்று தன் துணிச்சலை எடுத்துக் கூறி சண்டை போட்டு அவர்களை விரட்டுவார்.

திமுகவின் கடவுள் வாழ்த்து பாட்டு

நீரும் நெருப்பும் படத்தில் வரும் கடவுள் வாழ்த்துப் பாடல் திமுகவின் சின்னமான உதயசூரியனை வழிபடு பொருளாகக் கொண்டது. இதுவும் திமுகவின் பிரச்சாரப் பாடலாக அமைந்து இளம் சிறார்களின் மனதில் நம்பிக்கை ஊட்டிய பாடல் ஆகும். சிறுவர்கள் சண்டை பயிற்சி பெறுமிடத்தில் எம்.ஜி.ஆர். லாவகமாக தன் இரு



நீரும் நெருப்பும்

கைகளிலும் கத்தியை சுழற்றிக்கொண்டே சண்டைக்கான அசைவுகளுடன் பாடிக்கொண்டே வருவது கரணம் தப்பினால் மரணம் என்ற அச்சத்துடன் உற்சாகத்தையும் அளிக்கவல்லது. சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களுடன் மென்மையாகக் கத்திச் சண்டை போடுவதும் அவர்களின் திறமையைக் கண்டு எம்.ஜி.ஆர். தலையசைத்து சிரித்து ரசிப்பதும் பாட்டின் சுவாரசியக் காட்சிகள் ஆகும். கடைசியில் தன் இரு கத்தியையும் இலாவகமாக வீசி எறிந்துவிட்டு பிள்ளைகளுடன் கை கோர்த்து மெல்லோட்டம் நடத்துவதும் சிறுவர்களுடன் அமரும் போது உதய சூரியன் போல் அவர்களின் கத்திகள் காட்சி அழைப்பதும் சிறப்பான நிறைவுக் காட்சி ஆகும். அதன் பிறகு அவரை வளர்த்த பெற்றோர்கள் அங்கு வந்துவிடுவர். மணிவண்ணன் எம்.ஜி.ஆருக்கு நல்ல அறிமுகக் காட்சியாக இக்காட்சி அமைந்தது.

எம்.ஜி.ஆர். அரசியலின் இலட்சிய பயணம்

அண்ணா திமுக 1972இல் ஆரம்பித்து 1977இல் தேர்தல் வந்த நிலையில் மீனவ நண்பன் படப்பிடிப்பு நடந்தது. படம் திரைக்கு வந்த போது அண்ணா திமுக வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். முதல்வராகி விட்டார். படத்தின் நூறாவது நாள் வெற்றி விழாவில் ஆளுநர் பட்வாரிலால் முதல்வருடன் கலந்துகொண்டார். இப்படத்தின் படப்பிடிப்பு சில நாட்கள் இருந்ததால் எம்.ஜி.ஆர். அவசரம் அவசரமாக படப்பிடிப்பு நிலையத்துக்குள் வைத்து கடைசி உச்சக் காட்சி சண்டையை நடித்து முடித்தார். அதுவரை அவர் முதல்வர் பொறுப்பேற்பதை தள்ளி வைத்தார். மீனவ நண்பன் படப்பிடிப்பு முடித்து கிளம்பும் போது அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு நான் இதுவரை திரையுலகில் சக்கரவர்த்தியாக இருந்தேன். இப்போது மந்திரியாக தான் போகிறேன். மீண்டும் நடிக்க வருவேன். என் முதல் படத்தில் நடித்த கதாநாயகி ஒரு ராஜாவின் மனைவி. இந்தப் படத்தில் நடித்த லதா இராமநாதபுரத்து ராஜாவின் மகள் என்னுடன் நடித்ததற்கு நன்றிமா என்று நன்றி தெரிவித்தார். மிக நெகிழ்ச்சியான தருணமாக இது அமைந்தது.

இத்தகைய நெகிழ்ச்சியான தருணத்துக்கு காரணமாக அமைந்தவற்றில் ஒன்று சண்டைக்காட்சியுடன் கூடிய ‘நேருக்கு நேராய் வரட்டும்’ என்ற பாடல். திமுகவினரை தேர்தலில் சந்திக்க தயார் என்ற தகவலை தந்த இப்பாடல் பாடும் போது அவரை சுற்றி தீயவர்கள் கலந்திருப்பதும் அவர்கள் அவரை கொல்ல

முயல்வதும் அவர் அவர்களுடன் சண்டை போட்டு தன் உயிரைக் காப்பற்றியபடி முன்னேறி வருவதுமான காட்சிகள் காட்டப்படும். நெருக்கடி நிலை 1975 ஜூன் மாதம் அறிவிக்கப்பட்டதால் எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளுக்கு தணிக்கை கடுமையாயிற்று. எனவே, அவர் இந்தச் சண்டைக் காட்சியில் ஒரு சவுக்கு மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகளை எதிர்த்து தாக்கி தடுத்துக் கொண்டு வருவார்.

"நேருக்கு நேராய் வரட்டும்

நெஞ்சில் திடமிருந்தால் – என்

கேள்விக்கு பதிலைத் தரட்டும்

நேர்மைத் திறமிருந்தால்

நேர்மைத் திறமிருந்தால்"

எனத் தொடங்கும் இப்பாட்டு அண்ணா திமுக ஓர் இலட்சியப் பயணம் மேற்கொண்டுள்ளது என்பதை உணர்த்தும் பிரச்சாரப் பாடலாக அமைந்தது. மக்கள்



மீனவ நண்பன்

மனதில் எழும் கேள்விகளை தேங்காய் சீனிவாசன் மூலமாக படத்தில் கேட்க வைத்து அவற்றுக்கு பதில் சொல்லும் வகையில் எம்.ஜி.ஆர். இப்பாட்டை திறம்பட அமைத்திருப்பார். தன் சவாலை நேரடியாக அறிவித்து எதிரிகளை வழியில் எதிர்த்து வெற்றி பெற்றுக் கொண்டே வரும் ஒரு பயணப் பாடலாகவும் இக்காட்சி அமைக்கப்பட்டது. எம்.ஜி.ஆரின் அரசியல் பயணத்தில் எதிரிகள் காணாமல் போய்விடுவர். அவருக்கு வெற்றி மீது வெற்றி கிடைக்கும் என்று முன்கூட்டியே மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய பாடலும் சண்டையும் கலந்த காட்சி இது.

“நீதியின் தீபங்கள் ஏந்திய கைகளின்

இலட்சிய பயணம் இது –இதில்

சத்திய சோதனை எத்தனை நேரினும்

தாங்கிடும் இதயமிது

அண்ணனின் பாதையில்

வெற்றியே காணலாம்

தர்மமே கொள்கையாய்

நாளெல்லாம் வாழலாம்”

இவ்வாறு எம்.ஜி.ஆர். தனது படங்களின் சண்டைக் காட்சிகளை வெறும் சண்டைகளாக மட்டும் அமைக்காமல் அவற்றில் பாட்டு, வசனம், நகைச்சுவை ஆகியவற்றையும் கலந்து கொடுத்து ரசிகர்களுக்குப் பார்க்க சுவாரஸ்யமாக்கினார். தன் கட்சி கருத்துக்களை சண்டையின் ஊடே பாடிக் காட்டும் போது தொண்டர்கள் வீறு கொண்டு

எழுவர். கட்சிப்பற்று அதிகரிக்கும். வேகம் பிறக்கும். கட்சியில் ஆவேசமாக செயல்படுவர். இதற்காக எம்.ஜி.ஆர். சண்டையையும், எதற்கு சண்டை என்ற காரணத்தை தத்துவக் கருத்துக்களாகவும் காட்டினார். தீயவர்கள் வேறு தத்துவங்களை பின்பற்றுகின்றனர். அதனால் பொருளாதாரச் சுரண்டலுக்கும் ஏற்றத் தாழ்வுக்கும் ஆளாகிறோம். அவர்களின் கொள்கையைப் பின்பற்றாமல் நமது இயக்கத்தின் கொள்கைகளை பின்பற்றினால் நல்லதொரு சமத்துவ சம உரிமை சமுதாயத்தை உருவாக்கலாம் என்று பாட்டிடையிட்ட சண்டைக் காட்சிகளால் எம்.ஜி.ஆர். ரசிகர்களுக்கு ஊக்கமளித்தார்.



6. சிங்கம் புலியோடு சண்டைக் காட்சிகள்

எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிக்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே சண்டைக் காட்சிகளில் அதிக ஆர்வம் காட்டினார். அவர் 1957இல் சொந்தப்படமான நாடோடி மன்னன் தயாரித்த போது சிங்கத்துடன் ஒரு சண்டைக் காட்சி வைக்க வேண்டும் என எண்ணி இரண்டு சிங்கங்கள் வாங்கி ராஜா, ராணி என்று பெயரிட்டு அவற்றை வளர்த்தார். ஆனால் அந்தப் படத்துக்கு அவற்றை பழக்கி சண்டைக் காட்சி வைக்க முடியவில்லை. அவற்றில் ஆண் சிங்கமான ராஜா இறந்துவிட்டது. அதனைப் பாடம் செய்து தனது வீட்டில் சாப்பாட்டு அறையில் இருந்து மாடிக்குப் போகும் வழியில் அதனைக் கண்ணாடிக் கூண்டில் வைத்து இருந்தார். எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பின் இந்த சிங்கம் இப்போது அவரது நினைவில்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அங்கு வருவோர் அதனருகில் நின்று படம் எடுத்துக்கொள்கின்றனர். இந்தச் சிங்கம் அடிமைப்பெண் படத்தில் எம்.ஜி.ஆருடன் சண்டைக் காட்சியில் நடித்த சிங்கம் என்பது தவறு என எம்.ஜி.ஆரின் அண்ணன் மகன் சந்திரன் அவர்களின் பேட்டியால் அறிய முடிந்தது.

வண்டலூருக்குப் போன சண்டைப் புலி

அடிமைப்பெண் படம் எடுத்த போது எம்.ஜி.ஆருக்கு சிங்கத்துடன் ஒரு சண்டைக் காட்சி இந்தப்படத்திலாவது இடம் பெற வேண்டும் என்ற எண்ணம் மீண்டும் உதயமாயிற்று. அதனால் அவர் சர்க்கஸில் இருந்து கட்டளைகளைக் கேட்டு நடக்கப் பழக்கப்பட்ட சிங்கம் ஒன்றை ரிங் மாஸ்டருடன் வருவித்தார். அதனை தன் தோட்டத்தில் வைத்து பாதுகாத்து அதனுடன் நேரம் கிடைக்கும் போது பழகி வந்தார். சிங்கத்துக்கும் இவர் பழக்கமான பிறகு ஒரு நாள் சண்டைக் காட்சி எடுப்பதென முடிவாயிற்று. ஏற்கெனவே குலேபகாவலி படத்தில் புலியுடன் சண்டைக் காட்சியில் நடித்த அனுபவம் இருப்பதால் எம்.ஜி.ஆர். இம்முறை மிகவும் கவனமாக பெரிய குழியைத் தோண்டி அதற்குள் சிங்கத்தை உலவ விட்டு பழக்கினார். சிங்கம் குழியை விட்டு தாவி வெளியே வராத படிக்கு இருபதடி ஆழத்துக்கு பள்ளம் தோண்டி சமப்படுத்தப்பட்டு அங்கு சண்டைக் காட்சி எடுப்பதென முடிவாயிற்று.

சிங்கத்துடன் எம்.ஜி.ஆர். நேருக்கு நேர் நின்று முகமுகமாகச் சந்திக்கும் காட்சிகள் படமாக்கப்பட்டன. சிங்கத்தின் எடை அதிகம் என்றாலும் எம்.ஜி.ஆரின் உடல் வலிமையையும் மன உறுதியும் அதனை தாங்கிக்கொள்ள அவரால் முடிந்தது. சிங்கம் எம்.ஜி.ஆர். தோளின் மீது முன்னங்கால்களை வைத்து நிற்கும் காட்சிகளும் குளோசப் காட்சிகளும் படமாக்கப்பட்டன. சிங்கத்தின் முன் நின்று அதனை எதிர்க்க முனையும் காட்சிகள் அதன் முன்னால் பின்னால் நடந்து வரும்

காட்சிகள் சிங்கத்தின் முதுகில் உட்கார்ந்து அதன் வாயைப் பிளக்கும் காட்சி ஆகியவை எடுக்கப்பட்டன. சிங்கத்துடன் உருளும் காட்சிகள் பயிற்சியாளரைக் கொண்டு தனியாக எடுக்கப்பட்டன.

சிங்கத்துடனான சண்டைக்காட்சி முதல் நாள் படப்பிடிப்பு நடந்த போது அப்படத்தில் பணியாற்றுவோர் பலர் வேடிக்கை பார்க்க வந்துவிட்டனர். ஆட்களைக் கண்டு மிரண்ட சிங்கம் எம்.ஜி.ஆர். அதன் முன் சென்று நின்று முகமுகமாகப் பார்த்ததும் அவர் முகத்தில் அறைந்துவிட்டது. அதன் வேகத்தைப் பார்த்து வேகமாக ஒதுங்கிய எம்.ஜி.ஆருக்கு முகத்தில் ஒரு சிறு கீறல் விழுந்து ரத்தம் கசிந்தது. அதனைக் கண்ட ஒருவர் பயந்து 'ஐயோ அண்ணனை சிங்கம் அடித்துவிட்டதே' என்று அலறிவிட்டார். எம்.ஜி.ஆர். சட்டென்று அவர் முகத்தில் ஒரு அறைவிட்டார். 'ஏன் வீண் பீதியை கிளப்புகிறாய்' என்றார். பிறகு வேடிக்கை பார்க்க



அடிமைப் பெண்

கூடியிருந்த வசனகர்த்தா சொர்ணம் போன்றவர்களைப் போகச் சொல்லிவிட்டு ஒளிப்பதிவாளர், பயிற்சியாளர், சிங்கம் எம்.ஜி.ஆர். ஆகியோர் மட்டும் இருந்த நிலையில் மீண்டும் படப்பிடிப்பு தொடங்கியது. அடித்தவருக்கு எம்.ஜி.ஆர். ஆறுதல் சொல்லி பணம் கொடுத்து அனுப்பி வைத்தார். அதன் பிறகு சண்டைக் காட்சி எடுக்கும் போது வேறு ஆட்கள் எவரையும் உள்ளே அனுமதிக்கவில்லை.

சிங்கத்தின் குகையில் பண்டரிபாயும் ஜெயலலிதாவும்

சிங்கத்துடனான சண்டைக் காட்சியில் எம்.ஜி.ஆர். அதிகம் திட்டமிட்டு மிகுந்த முனைப்புடன் நடித்தார். சிங்கத்துக்கு மயக்க மருந்து கொடுத்திருந்த நிலையிலும் அது அவ்வப்போது உறுமிக்கொண்டே இருந்தது. இதனால் அந்தக் காட்சியில் நடித்த பண்டரிபாய், ஜெயலலிதா ஆகியோருக்கு அச்சம் ஏற்பட்டது. சண்டைக்காட்சியை இன்னும் சிறப்பாக உணர்ச்சி



அடிமைப் பெண்

மயமாக எடுக்க வேண்டும் என திட்டமிட்ட எம்.ஜி.ஆர். ஜெயலலிதா இக்காட்சியில் இருந்தால் பெண்களின் வரவேற்பு அதிகம் கிடைக்கும் என்று முடிவு செய்தார். மேலும் படம் தாய்க்காக மகன் படும் துயரங்கள் பற்றியது என்பதால் தாயையும் சிங்கத்துடன் வைத்துக் காட்டினால் தாய்க்குலத்தின் வரவேற்பு கிட்டும் என்பதால் பண்டரிபாயையும் இக்காட்சியில் இணைத்தார். ஆக படத்தின் முக்கிய கதாபாத்திரங்களான வேங்கையன் எம்.ஜி.ஆர்., அவரது தாய் மற்றும் ஜோடி என மூவரும் சிங்கத்துடனான காட்சிகளில் தோன்றி நடித்தனர். இவர்களும் அந்தப் பள்ளத்துக்குள் இறக்கப்பட்டு கவனமாக நடித்து முடித்த பிறகு வெளியே கொண்டு வரப்பட்டனர்.

சிங்கத்துடன் எம்.ஜி.ஆர். சண்டையிடும் காட்சி அடிமைப்பெண் படத்தின் வசூல் சாதனையை உயர்த்தியது. அதற்கு முன்பு வரை தமிழ்ப்படங்களில் அதிக வசூல் செய்த படம் எங்க வீட்டுப் பிள்ளை என்ற வசூல் சாதனையை அடிமைப்பெண் வசூல் முறியடித்தது. எம்.ஜி.ஆரின் படங்களுக்கு அவரது படங்களே வசூல் சாதனைக்கு இலக்காக அமைந்தன. படப்பிடிப்பு முடிந்ததும் சிங்கத்தை எம்.ஜி.ஆர். விலங்கியல் பூங்காவுக்கு வழங்கிவிட்டார். வண்டலூர் வனவியல் பூங்காவில் பல ஆண்டுகள் உயிரோடிருந்த சிங்கம் பிறகொரு நாள் உயிர் நீத்தது.

புலியுடன் சண்டைக்காட்சி

குலேபகாவலி என்ற படம் ஆயிரத்தொரு அரபு கதைகளில் ஒரு கதையைக் கொண்டு உருவாக்கப்பட்டது. படம் ஆக்கப்படுவதற்கு முன்பு

இக்கதை நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றது. படத்தில் எம்.ஜி.ஆர். தன் தந்தைக்கு கண் பார்வை கிடைக்க குலேப் மலர் வேண்டுமென்று பகாவலி ராணியைச் சந்தித்த போது அவள் மூன்று போட்டிகளில் வென்றால் அம்மலரைத் தர முடியும் என்றாள். அதில் ஒரு போட்டி அம்மலர் இருக்கும் செடியைக் காத்து நிற்கும் புலியுடன் மோதுவதாகும். இப்படத்தை டி.ஆர்.ராஜகுமாரியின் தம்பி டி.ஆர். ராமண்ணா ஆர்.ஆர்.பிக்சர்ஸ் மூலமாகத் தயாரித்தார். இதில் பகாவலி ராணியாக ஜி.ஆர்.வரலட்சுமி நடித்தார்.

புலி சண்டைக்கு பெரிய பத்தடி பள்ளம் வெட்டி தயாராக இருந்தது. புலியை உள்ளே இறக்கி அதன் பயிற்சியாளரும் உள்ளே இறங்கி, சுற்றி நடக்க வரச் செய்து அதற்கு சில பயிற்சிகள் அளித்தார். எம்.ஜி.ஆருக்கு கனத்த தோல் உடை தைக்கப்பட்டு அதில் இரும்பு வளையங்கள் கோர்க்கப்பட்டன. புலி அடித்தாலும் அதன் நகங்கள் மேலே பட்டு கீறி விடாமல் இருக்க கனத்த உடை தயாராயிற்று. அதனை



குலேபகாவலி

அணிந்து கொண்டு முதல் நாள் படப்பிடிப்புக்கு எம்.ஜி.ஆர். புலி இருந்த பள்ளத்தில் இறங்கினார். ஒளிப்பதிவாளரும் இயக்குனரும் கேமராவை கிரேனில் அமர்ந்து மேலே இருந்து லோ ஆங்கிளில் பள்ளம் மற்றும் புலியைப் படமெடுக்க தயாராக இருந்தனர்.

பள்ளத்தில் சுற்றி வந்த புலி திடீரென மேலே தாவி படப்பிடிப்பு நிலையத்துக்குள் நடக்கத் தொடங்கியது. பயிற்சியாளரால் பள்ளத்தை விட்டு மேலே தாவி வர இயலவில்லை. இயக்குனரும் ஒளிப்பதிவாளரும் கிரேனில் விர் என்று மேலே போய்விட்டனர். அங்கிருந்த கணபதி என்ற ஒல்லி மனிதர் அருகிலிருந்த ஓட்டுக் கட்டிடத்தின் மீது வேகமாக ஏறினார். எம்.ஜி.ஆர். அவ்விடத்தை விட்டு நகராமல் கையில் ஒரு ரிவால்வர் துப்பாக்கியோடு கேமரா இருந்த கிரேனின் அருகில் நின்று கொண்டார். பிறகு ஒரு கயிறு பள்ளத்துக்குள் இறக்கப்பட்டு பயிற்சியாளர் மேலே வந்து புலியைத் தேடி ஓடிப்போய் பிடித்துக்கொண்டு வந்தார்.

நாடோடி மன்னன் படத்துக்கு இரண்டு சிங்கங்கள் வாங்கிய சமயம் ஒரு நாள் பயிற்சியாளர் ஒரு சிங்கத்தைக் கட்டிப்போட்டுக் கொண்டு இருந்தபோது இன்னொரு சிங்கம் தனது முதுகில் இருந்த சங்கிலியுடன் தெருவுக்குள் போய்விட்டது. சில அடி தூரத்தில் இருந்த ஒரு பங்களாவுக்குள் நுழைந்தது. சிங்கம் வருவதைக் கண்டவர்கள் வேகமாக மாடிக்குப் போய் ஒளிந்துகொண்டனர். சிங்கத்தின் பின்னால் ஓடி வந்த பயிற்சியாளர் சிங்கத்தின் சங்கிலியைக் குனிந்து எடுக்க முயன்ற போது சிங்கம் பயிற்சியாளரின் கையைக் கடித்து

விட்டது. அதன் பிறகு அந்த சிங்கத்தை வைத்து நாடோடி மன்னன் படத்தில் சண்டைக்காட்சி வைக்கவில்லை. இது போல சற்று அயர்ந்தாலும் சிங்கம், புலி ஆகியன வெளியே கிளம்பத் தொடங்கிவிடும். அப்போது மற்றவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்.

குலேபகாவலி படத்தில் புலிச் சண்டை ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது. எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளில் புதுமை படைக்க வேண்டும் என்ற ஆவலுடன் புதிய முயற்சிகளை மேற்கொண்டார். நேருக்கு நேர் புலியோடு மோதுதல், புலி தன் முன்னங்கால்களை எம்.ஜி.ஆர். தோள்களில் வைத்து தாக்க முற்படுதல், புலியை கட்டிப்பிடித்து படுத்து கிடத்தல் போன்ற காட்சிகளில் எம்.ஜி.ஆர். துணிச்சலோடு நடித்தார். புலியோடு உருளும் காட்சிகள் பயிற்சியாளரைக்கொண்டு எடுக்கப்பட்டன.

பறக்கும் பாவை படத்தில் எம்.ஜி.ஆரை கொல்ல



பறக்கும் பாவை

ஏவப்பட்ட புலியை தான் உட்கார்ந்திருந்த ஸ்டுலைக் கொண்டு எதிர்ப்பார். அது பயந்து பின்வாங்கும். வேறு எந்த முன்னேற்பாடும் இல்லாத நிலையில், புலியை எதிர்க்கும் இக்காட்சி இரவுக் காட்சியாக அமைந்து பார்ப்பவருக்கு அச்சத்தை ஊட்டும்.

பழிவாங்கத் துடிக்கும் புலியுடன் மோதல்

வேட்டைக்காரன் படத்தில் ஜோடி சிறுத்தையில் ஒன்றை எம்.ஜி.ஆர். சுட்டுவிட இன்னொன்று அவரை விரட்டிக்கொண்டு வீடு வரை வரும் காட்சிகள் எடுக்கப்பட்டன. அப்போது படப்பிடிப்பு செட்டுக்குள் புலியைக் கொண்டு வந்து காட்சிகள் படமாக்கப்பட்டன. இதே படத்தில் ஒரு சிங்கத்தின் காலில் தைத்திருந்த முள்ளை எம்.ஜி.ஆர். எடுத்துவிடுவார். அது, அந்த பழிவாங்கும் உணர்வுடன் அலையும் சிறுத்தையின் தாக்குதலில் இருந்து ஒரு முறை எம்.ஜி.ஆரின் மகன் ராஜாவைக் காப்பாற்றும். சிறுத்தைப் புலி சிறுவன் ராஜாவை தாக்க வந்த போது இந்த சிங்கம் [நன்றிக்கடனுடன்]



வேட்டைக்காரன்

சிறுத்தையின் மீது பாய்ந்து அதனை அங்கிருந்து விரட்டிவிடும். இதனை அறிந்ததும் எம்.ஜி.ஆர். சிங்கத்தைப் பார்த்து என் வம்சத்தைக் காப்பாற்றியதால் இனி உன் இனத்தையே வேட்டையாட மாட்டேன் என்று தெரிவிப்பார். இப்படத்தின் நெடுகிலும் சிறுத்தை பழிவாங்கத் துடிக்கும் கதாபாத்திரமாக வந்துகொண்டே இருக்கும்.

புலியும் காதலும்

தாய் சொல்லைத்தட்டாதே படத்தில் புலியைப் பார்த்து பயந்து அலறி மயங்கி விழுந்த சரோஜா தேவியை எம்.ஜி.ஆர். காப்பாற்றி தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவிப்பார். அதன் பிறகு அவர்களின் பரஸ்பர அறிமுகமும் காதலும் தொடங்கும்.

விலங்குகளுக்குள் சண்டை

தேவர் படங்களில் புலி மற்றும் கழுதை புலி சண்டை இடும் காட்சிகள் இடம் பெற்றன. இரண்டு



தாயைக் காத்த தனயன்

சிறுத்தை புலிகள் தமக்குள் சண்டையிடும் காட்சிகள் இடம் பெற்றன. விலங்குகள் ஒரே இனமாக இருந்தாலும் வெவ்வேறாக இருந்தாலும் அவை தமக்குள் மோதிக்கொள்ளும் சண்டைக்காட்சிகள் விறுவிறுப்பாக அமைந்தன. ரசிகர்கள் விலங்குகளின் சண்டைக் காட்சிகளையும் ரசித்தனர். ஆனால் பெண்களுக்கு இவை ரசனைக்குரியதாக அமையவில்லை. மாறாக எம்.ஜி.ஆர். இடம்பெறும் காட்சிகளே சுவாரஸ்யமாக திகழ்ந்தன.

நிறைவு

எம்.ஜி.ஆர். தன் உடம்பை உடற்பயிற்சியினால் செம்மையாக வைத்திருந்ததால் அவருக்குக் காட்டு விலங்குகளுடன் மோதுவதில் அச்சம் தோன்றவில்லை. மேலும் படம் எடுக்கும் தொழில்நுட்பம் தெரிந்தவராக இருந்ததால் தான் நடிக்கும் காட்சிகளையும் பயிற்சியாளரைக் கொண்டு எடுக்கப்படும் காட்சிகளையும் அவரால் பிரித்தறிய முடிந்தது. கேமரா கோணங்கள் வழியாக சண்டைக் காட்சியில் விருவிருப்பூட்டவும் அவர் அறிந்திருந்தார். விலங்குகளுக்குரிய பயிற்சியாளரையும் விலங்கு மருத்துவர்களையும் அடிக்கடி பார்த்துப் பேசி அந்த விலங்குகளின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தினார். சண்டைக் காட்சிகள் சிறப்பாக அமைய எம்.ஜி.ஆரின் மனத்துணிவு முக்கிய காரணியாகும். தனது பாதுகாப்பையும் மற்றவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்து கொள்வதில் வல்லவராக இருந்தார். இத்தனை விஷயங்களிலும் அவர் கவனம் செலுத்தியதால் விலங்குகளுடனான சண்டைக் காட்சிகள் சிறப்பாக அமைந்து ரசிகர்களின் பேராதரவைப் பெற்றன.



நீரும் நெருப்பும்

7. எம்.ஜி.ஆர். சண்டைக் காட்சிகளில் வசனம்

எம்.ஜி.ஆர். படங்களில் பல சண்டைக் காட்சிகள் தொடங்குவதற்கு முன்பு அந்த சண்டைக்கான காரணம் விளக்கப்படும். சண்டை தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தான் போடப்படுகிறது என்ற நியாயத்தை படம் பார்ப்பவர்களுக்குத் தெரிவிக்கும் உத்திமுறையை எம்.ஜி.ஆர். பின்பற்றினார். சில சண்டைக் காட்சிகளில் இது ஒன்றும் பெரிய சவாலான சண்டை அல்ல. எனக்கு மிகச் சாதாரணம் என்பதை உணர்த்துவதற்கு சில வசனங்கள் சேர்க்கப்படும். வேறு சில சண்டைக் காட்சிகளில் தனக்கு சண்டையிட விருப்பமில்லை என்பதையும் தெரிவிப்பார். ஆனால் தீயவனின் தீமைகள் தொடராமல் இருக்க சண்டை அவசியமாகும். சில சண்டைக் காட்சிகள் தனி நபர் மோதலாக இல்லாமல் சமூகப் பிரச்சனைகளின் காரணமாக நடைபெறும். இவ்வாறு எம்.ஜி.ஆர். தன் சண்டைக் காட்சிகள் குறித்துப் படம் பார்ப்போருக்கு சண்டைகளுக்கு முன்பும் இடையிலும் விளக்கிச் சொல்வார்.

தொடக்க சண்டையில் கதைசொல்லும் வசனம்

படகோட்டி, உரிமைக்குரல், அரசகட்டளை போன்ற படங்களில் படம் ஆரம்பித்ததும் சண்டைக் காட்சிகள் இடம்பெறும். அவை கதையின் மையக்கரு என்ன என்பதைத் தொடக்கத்திலேயே உணர்த்திவிடும். அப்போது வசனங்கள் கதையோட்டத்தை நமக்கு உணர்த்தும். சண்டைக் காட்சி படத்தின் வேகத்தை அதிகரிக்கும். சான்றாக அரச கட்டளை படத்தில் சாதாரணக் குடிமகனான எம்.ஜி.ஆர். [விஜயன்] மன்னரை [பி. எஸ். வீரப்பன்] கொல்ல வருவார். மன்னரின் நெஞ்சில் குத்தீட்டியை பதிக்கும் போது மன்னர் விழித்துக்கொண்டு

வீரப்பன் : யார் நீ?

எம்.ஜி.ஆர் : குமரி நாட்டின் குடிமகன்

வீரப்பன் : குமரி நாட்டின் குடிமகன் இப்படி கோழையாக இருக்க மாட்டான்.

என்பார். இருவரும் சண்டை இடுவர். எம்.ஜி.ஆரைக் கைது செய்ய சொல்லி மறுநாள் அவரை



அரச கட்டளை

மன்னராக்குவார்.

படகோட்டி படத்தில் இரு குப்பமும் தத்தம் கோயில்களில் சாமி கும்பிட்டு விட்டு ஊர்வலமாகக் குப்பத்துக்குத் திரும்பும் சமயத்தில் தீயவன் நீலமேகத்தின் சூழ்ச்சியால் இரு குப்பத்துக்கும் இடையே சண்டை வந்துவிடும். எம்.ஜி.ஆரின் திருக்கை மீன் குப்பத்தின் தலைவரான அவரது தந்தையாரை வஞ்சகமாக வந்து தாக்கும் போது எம்.ஜி.ஆர். அங்கே உட்புகுந்து அவர்களின் கம்புகளை தனது ஒரே கம்பால் தடுத்து நிறுத்தி தாக்குதலைத் தொடர்வார். இருட்டில் அவர்களின் கம்புகள் ஒன்றோடோன்று மோதுவதும் எம்.ஜி.ஆரின் கம்பால் அடிபட்டு ஒவ்வொருவராகச் சாய்வதும் என இச்சண்டைக் காட்சி விறுவிறுப்பாக அமைந்திருக்கும். படத்தின் தொடக்கத்தில் கதையைச் சொல்லிவிடும் வகையில் வசனமும் சேர்க்கப்பட்டிருக்கும்.

படகோட்டியின் முதல் காட்சியில் முருகன் கோயிலில் எம்.ஜி.ஆரின் அப்பாவாக நடிக்கும் திருப்பதி சாமி,

‘உலகத்து உயிர்கள் எல்லாம் இன்பமாய் வாழ நீ தான் அருள் செய்யணும்’

என்று முருகனிடம் வேண்டுவார். இந்த வசனம் இவர் பொதுநல விரும்பி என்பதை சுட்டுகிறது.

அடுத்த காட்சியில் சுறா மீன் குப்பத்தின் துர்க்கை அம்மன் கோயிலில் பூஜை நடக்கும். அப்போது குப்பத்தின் தலைவர் ,

‘அம்மா பராசக்தி, பத்ரகாளி,

நீ ரொம்ப கோபக்காரி. எங்க குப்பத்தோடு போட்டி போடுற குப்பத்துக்காரன்களை உன் கோபத்தால அழிக்கணும். ஆனால் உன் குப்பத்துக் குழந்தைகளை நீ வாழ வைக்கணும் தாயி''

என வணங்குவார். இந்த வசனம் இவர் சுயநலக்காரர். பகைமை உணர்வுடையவர் என்பதை உணர்த்துகிறது.

திருப்பதி சாமி : மலையப்பா இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த போட்டியும் பொறாமையுமா இருக்கணும்? இந்த நல்ல நாள், தெய்வத்திருநாள், கடவுளுடைய சன்னிதில நம்ம இரண்டு குப்பத்து மக்களும் ஒத்துமையா இருக்க உறுதி எடுப்போம், வாங்க . . .

ராமதாஸ் : பாத்தீங்களாடா, திருக்க மீன் குப்பத்து தலைவன் பேசுற பேச்ச, ஓய் யாருக்கிட்ட உன் தந்திரம், கத்தியும், கபடாவும் வச்சிக்கிட்டு சமாதானமாய்ய பேசுற? ஏண்ட நிக்கிறிங்க புகுந்து கொல்லுங்கடா.

ராமதாஸ் குப்பத்து மக்கள் எம்.ஜி.ஆர். அப்பாவை தாக்க முறப்படும்பொழுது எம்.ஜி.ஆர். தன் சிலம்பால் நால்வரின் சிலம்பையும் தடுத்து சண்டையிடுவார். அப்பொழுது,

திருப்பதி சாமி : மாணிக்கம் வேண்டாம்ப்பா நான் சொல்றத கேளு.

எம்.ஜி.ஆர். : அப்பா சும்மா இருங்க உங்களையே அடிக்க குச்சிய நீட்டுறானுங்க, இவங்களை சும்மா விடலாமா?



படகோட்டி

சண்டையின் நடுவே திருப்பதி சாமியை தாக்கி விடுவர். தலையில் பலத்த காயத்துடன் கீழே விழுந்துவிடுவார். குப்பத்து மக்கள் கத்துவதைக் கேட்டு எம்.ஜி.ஆர். ஓடி வந்து பார்க்கும்போது,

எம்.ஜி.ஆர். : அப்பா . . . அப்பா யாரப்பா இப்படி செய்தது?

திருப்பதி சாமி : மாணிக்கம் . . . மாணிக்கம் போகாத, உட்கார், என் பக்கத்தில் உட்கார், மாணிக்கம் நல்ல நாள், கடவுளுடைய அனுக்கிரகம் எனக்கு கெடச்சது, இந்த இரண்டு குப்பமும் ஒத்துமையா வாழணும்னு கனவு கண்டேன், முடியாம போச்சு. மாணிக்கம், உன்னுடைய முயற்சிலயாவது அந்த ஒத்துமை நிலச்சி நிக்கட்டுமப்பா. எனக்கு ஏற்பட்ட இந்த நிலைக்கு நீங்க யாரும் வருத்தப்படாதீங்க, வருத்தப்படாதீங்க. மாணிக்கம் என் கடைசி ஆசை

மக்களுடைய நன்மையை உன் உயிரைவிட பெரிசா மதிச்சு பாடுபடணும் மாணிக்கம், மறந்துடாத.

எம்.ஜி.ஆர். : ஆகட்டுமப்பா, அப்படியே செய்றேன்.

அரசியலும் காதலும் மோதும் போது

அரச கட்டளை படத்தில் சரோஜாதேவி எம்.ஜி.ஆருக்கு கொடுத்த காதல் பரிசில் தனது நாட்டு சின்னம் பொறிக்கப்பட்டிருப்பதால் நம்பியார், எம்.ஜி.ஆரை வழி மறிப்பார்.

நம்பியார் : நில் . .

எம்.ஜி.ஆர். : நீங்களா? என்ன இது? உங்களுக்கு என்ன வேணும்?

நம்பியார் : உன் கழுத்திலே மின்னும் அந்த பதக்கம் வேண்டும்.

எம்.ஜி.ஆர். : (சிரித்துக் கொண்டே) நானே திருடன் ... என்னிடமா வழிப்பறி?

நம்பியார் : நீ திருடன்தான். கோடி கோடியாக



அரச கட்டளை

செல்வம் இருந்து அதை நீ கொள்ளையடித்துச் சென்றிருந்தால் கவலையில்லை. ஆனால் அது என் நாட்டின் கௌரவச் சின்னம். அதைக் காதலுக்கு பரிசாக நீ கவர்ந்துச் செல்வதை நான் அனுமதிக்க முடியாது.

எம்.ஜி.ஆர். : ச்சே இது வெறும் காதல் பரிசு மட்டும் அல்ல. என் மனைவி எனக்கு அளித்த நிச்சயதார்த்தப் பரிசு.

நம்பியார் : ஆ ! என்ன திமிர் . . . என்ன ஆணவம். திருமணம், மறுவீடு, சுகவாழ்வு இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தெய்வம் அவர். அவரை பாசப்படுகுழியில் தள்ள நினைக்கும் என் குலப்பகைவனே கொடுத்துவிடு அந்தப் பதக்கத்தை.

எம்.ஜி.ஆர். : முடியாது . . . இது என் உயிருக்கு ஈடானது

நம்பியார் : அப்படியானால் உன் உயிரையே பறிக்க வேண்டிய நிலை ஏற்படும் எனக்கு.

எம்.ஜி.ஆர். : செடியிலே பூத்த மலர் அல்ல பெரியவரே என் உயிர். நீங்கள் கைநீட்டி பறிப்பதற்கு.

நம்பியார் : விளையாடாதே , கடைசியாக எச்சரிக்கிறேன் . . கொடுத்துவிடு.

எம்.ஜி.ஆர். : மறுத்தால்?

நம்பியார் : பறித்துக்கொள்வேன்.

எம்.ஜி.ஆர். : தடுத்தால்?



அரச கட்டளை

நம்பியார் : தாக்குவேன்.

எம்.ஜி.ஆர். : (சிரித்துக் கொண்டே) ம் ம் முடிவு?

நம்பியார் : நீ மடிவாய்.

எம்.ஜி.ஆர். : (சிரித்துக் கொண்டே) உங்கள் பரம்பரையே படையெடுத்து வந்தாலும் பாதியிலேயே ஓடிப்போவார்கள்.

நம்பியார் : நான் ஓட மாட்டேன் . . . உன்னை ஒழிப்பேன் . . . அல்லது நானே மடிவேன் (எனக் கூறிக் கொண்டே தாக்க ஆரம்பித்தல்)

எம்.ஜி.ஆர். : (சிரித்துக் கொண்டே) பின்னால் நகர்வார்.

நம்பியார் : எடு வாளை

எம்.ஜி.ஆர். : ம் ஹும் . . . நீங்கள் என் மானத்தோடு விளையாடுகின்றீர்.

நம்பியார் : எங்கள் மானத்தோடு நீ விளையாடிவிட்டாய்.

இதன் பிறகு இருவருக்கும் இடையில் வாள் சண்டை நடக்கும். இச்சண்டையின் போது எம்.ஜி.ஆர். சிரித்துக்கொண்டே விளையாட்டாக சண்டை போடுவார். இதைக் கவனித்த நம்பியார் எம்.ஜி.ஆரிடம்

நம்பியார் : நீ விளையாடிக் கொண்டிருக்கிறாய்

எம்.ஜி.ஆர். : நான் விளையாடுவதற்கு உங்களைப் போன்ற தைரியசாலி எனக்கு கிடைப்பதேயில்லை.

எம்.ஜி.ஆர். : ஓய்வு தேவையா?

நம்பியார் : முடிவான ஓய்வை உனக்குத் தருகிறேன்.

எம்.ஜி.ஆர். : ஆமாம் . . . என்னென்ன வகை விளையாட்டை தெரிந்து வைத்திருக்கிறீர் ?

நம்பியார் : விளையாட்டு . . . உன் உயிரை வாங்கும் விளையாட்டுக்கூட தெரியும். வேண்டாம் என்று பார்க்கிறேன்.

எம்.ஜி.ஆர். : பாவம் .

சண்டையில் எம்.ஜி.ஆர். வெற்றி பெறுவார்.

எம்.ஜி.ஆர். : இனிமேலாவது ஆத்திரத்திற்கு அடிமையாகாதீர்

என்று நம்பியாரிடம் சொல்லிவிட்டு தன் கழுத்தில் தொங்கும் காதல் பரிசை ஆசையாக பார்த்த படி திரும்பி நடந்து போவார். அப்போது நம்பியார் நில் என்று சொல்லி எம்.ஜி.ஆரின் கழுத்தில் கத்தியை

வைத்து அச் சங்கிலியைப் பறித்துவிடுவார். எம்.ஜி.ஆருக்கு இப்போது கோபம் வந்துவிடும்.

எம்.ஜி.ஆர். : கோழைத்தனம்

நம்பியார் : இனி எனக்கும் உனக்கும் பகையே கிடையாது. நீ என் நண்பன். போகலாம்.

எம்.ஜி.ஆர். : என் மாலையைக் கொடுத்துவிடுங்கள் நாம் நண்பர்களாகவே இருப்போம்.

நம்பியார் : இது என் உயிருக்கும் மேலானது.

எம்.ஜி.ஆர். : அப்படியானால் உங்கள் உயிரையே பறிக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்படும்.

இப்போது நடக்கும் சண்டையில் எம்.ஜி.ஆர். ஆவேசமாக தாக்கி சங்கிலியைத் திரும்பப் பெற முயல்வார். நம்பியாரோ அலட்சியமாக தனக்கு வேண்டியது தனக்குக் கிடைத்துவிட்டது என்ற இறுமாப்புடன் சண்டை இடுவார். இச்சண்டைக் காட்சி எள்ளல், நகைச்சுவை, மகிழ்ச்சி, கேலி, கிண்டல், ஆவேசம், ஆக்ரோஷம் என்று பல வகை உணரச்சிகளுடன் வடிவமைக்கப்பட்டிருக்கும். சண்டை நடப்பதாக அறிந்து சரோஜாதேவி விரைந்து வருவார்.

சரோஜாதேவி : எதற்காக இந்த போராட்டம்? ஏன் இந்த கொலைப்பயிற்சி?

எம்.ஜி.ஆர். : உன் அன்பின் அடையாளமான இந்த பதக்கம் இவருக்கு வேண்டுமாம்.

நம்பியார் : இந்தப்பதக்கம் அல்லது உன்னுடைய உயிர். (மீண்டும் சண்டை தொடரும்)

சரோஜாதேவி : நிறுத்துங்கள் . . . . நில்லுங்கள் . . . . நிறுத்துங்கள் . . . .. உங்கள் இருவரில் யாருமே சாக வேண்டாம், வேண்டுமானால் என்னை கொன்று விடுங்கள்.

நம்பியார் : கமலா !!! . . . . .

சரோஜாதேவி : நீங்கள் போகமாட்டீர்களா? தயவுசெய்து போய்விடுங்கள்.

என்று எம்.ஜி.ஆரிடம் கெஞ்சி கேட்டுக்கொள்வார். எம்.ஜி.ஆர். தனக்கு கிடைத்த காதல் பரிசுடன் செல்வார்.

காதலிக்காக நடக்கும் சொற்போர்

ஆயிரத்தில் ஒருவன் படத்தில் தன்னைக் காதலித்த இளவரசியை தனது பொது பணிகள் காரணமாக மறுத்துவிட்ட எம்.ஜி.ஆர். ஏலத்தில் அவரை நம்பியார் வஞ்சகமாக அடையத் திட்டமிட்டதைக் கண்டதும் இளவரசியைக் காப்பாற்ற வேண்டி ஏலத்தில் அதிக தொகை [இரண்டு இலட்சம் பொன்] கொடுத்துப் பெற்று விட்டில் கொண்டு வந்து வைத்திருப்பார். நம்பியாரின் சூழ்ச்சி தொடரும். அவரது மனைவி எம்.ஜி.ஆரிடம் வந்து தன் இல்லற வாழ்வு காப்பாற்றப்பட வேண்டும் என்று கெஞ்சுவார். அந்த நேரம் அங்கு வந்த நம்பியார் அந்த பெண்ணை என்னிடம் கொடுத்துவிடு என்று எம்.ஜி.ஆரிடம் கேட்பார். இங்கும் அடுத்து வரப் போகும் சண்டையை நியாயப்படுத்தும் வகையில் நீண்ட வசனக் காட்சி இடம் பெற்றது. இந்தச் சண்டை தவிர்க்க இயலாத சூழ்நிலையில் நடக்கிறது மற்றபடி

வன்முறை எனது வழியல்ல என்பதை எம்.ஜி.ஆர். தனது ஒவ்வொரு சண்டைக் காட்சியிலும் நிறுவுவார். எம்.ஜி.ஆர். விட்டுக்குள் வந்த நம்பியார்,

நம்பியார் : என்ன தனிமையில் இருக்கிறாய்?

எம்.ஜி.ஆர். : தனிமையில் தான் எனக்கு இனிமை இருக்கிறது.

நம்பியார் : எங்கே அந்த தங்க சிலை?

எம்.ஜி.ஆர். : இருக்கிறாள்

நம்பியார் அந்த வீடு முழுக்க தன் கண்களைச் சுற்ற விட்ட படி தேடுவார்.

எம்.ஜி.ஆர். : வந்த வேலை?

நம்பியார் : அதைத்தானே செய்து கொண்டிருக்கிறேன் புரியவில்லையா? அந்த சுந்தரியை நீ எனக்கு சொந்தமாக்க வேண்டும்.



ஆயிரத்தில் ஒருவன்

எம்.ஜி.ஆர். : நிறுத்துங்கள்! உங்கள் பொக்கிஷமே இடமாறினாலும், அவள் கை மாறமாட்டாள்.

நம்பியார் : கேவலம் ஒரு பெண்ணுக்காக நட்பைக் கெடுத்துக்கொள்ளாதே, யோசித்துச் சொல்.

எம்.ஜி.ஆர். : யோசிக்க வேண்டியது நானல்ல, அவளை யாசிப்பதை விடுங்கள்.

நம்பியார் : உயிர் மீது உனக்கு ஆசை இல்லையா?

எம்.ஜி.ஆர். : இதே கேள்வியை நானும் கேட்கலாமா?

நம்பியார் : மோதுவதுதான் உன் முடிவா?

எம்.ஜி.ஆர். : உங்களுக்கு அதைத்தவிர வேறு வழியில்லை என்றால் நான் தயார்.

நம்பியார் : அவளை அடைந்தே தீருவேன்.

எம்.ஜி.ஆர். : அதுதான் நடக்காது.

நம்பியார் : ஆஹ்! என்னையே எதிர்க்க துணிந்துவிட்டாய், மதம் கொண்ட யானை என்ன செய்யும் தெரியுமா?

எம்.ஜி.ஆர். : சினம் கொண்ட சிங்கத்திடம் தோற்று ஓடும்.

நம்பியார் : தோல்வியே அறியாதவன் நான்.

எம்.ஜி.ஆர். : தோல்வியை எதிரிக்கு பரிசளித்தே பழகியவன் நான்

நம்பியார் : நாவை அடக்கு. நான் உன் தலைவன்

எம்.ஜி.ஆர். : உங்கள் நடத்தை அப்படி இல்லையே

நம்பியார் : ஆ ஆ . . . என்ன சொன்னாய் உன் கர்வத்தை அடக்குகிறேன் பார். . . .

வாள் சண்டை தொடங்கும். இடையில் எம்.ஜி.ஆரின் இடுப்பிலிருந்த குத்துவாளையும் நம்பியார் எடுத்துக்கொள்வார். பிறகு அந்தக் குத்துவாளை எம்.ஜி.ஆர். தட்டிவிட்டு அது மேலே பறந்த போது பிடித்துக்கொள்வார். இது எனது குத்து வாள், நீர் உம்முடையதை எடுத்துக்கொள்ளும் என்பார். பிறகு இருவரும் இரண்டு ஆயுதங்கள் ஏந்தி போரிடுவர். இது போல கடற்கரை சண்டையின் போதும் அழகான வசனங்கள் இப்படத்தில் இடம்பெற்றன.

ஆணவத்தில் தொடங்கி அன்பாக மாறிய சண்டையில் வசனங்கள்

ஜன்ஜிர் என்ற இந்தி படத்தில் எம்.ஜி.ஆர். கோபக்கார இளைஞனாகவும், இஸ்லாமியராகவும் இரு வேடங்களில் நடித்தார். அண்ணா திமுக ஆரம்பித்த பிறகு எம்.ஜி.ஆர். அனைவரின் ஆதரவையும் பெறும் முயற்சியில் கவனம் செலுத்தினார். இதனால் சகல மதம், தொழில், ஜாதி என்று அனைத்து தரப்பையும் பிரதிபலிக்கும் காட்சிகள், கதாபாத்திரம், பாடல்கள் என்று தனது படங்களில் அமைத்தார்.

இந்தியில் ஜன்ஜீர் படத்தில் இஸ்லாமியர் கதாபாத்திரத்தை இன்னொருவர் நடித்திருக்க அதன் தமிழாக்கமான சிரித்து வாழ வேண்டும் படத்தில் எம்.ஜி.ஆரே இவ்வேடத்தையும் ஏற்றார். மேலும் இவ்வேடத்திற்கு கீழக்கரையைச் சேர்ந்த தனது முஸ்லிம் நண்பர் அப்துல் ரஹ்மானின் பெயரைச் சூட்டினார். பாடலிலும் அப்பெயர் இடம் பெறச்

செய்தார். ஏற்கெனவே உலகம் சுற்றும் வாலிபன் படப்பிடிப்பு தாய்லாந்து நாட்டில் நடந்த போது அங்கு அவர் நடந்து கொண்ட விதம், காட்டிய அன்பும் பரிவும் கண்ணுற்ற முஸ்லிம் மக்கள் இங்கு ராமநாதபுரம் பகுதிகளில் குடியிருந்த தமிழ் முஸ்லிம்களிடம் எம்.ஜி.ஆர். பற்றி சிறப்பாக எடுத்துரைத்து, இனி அண்ணா திமுகவை தான் நாம் ஆதரிக்க வேண்டும் என்று சொல்லி வைத்தனர். இப்போது இவர் அப்துல் ரஹ்மான் என்ற பெயரைச் சூட்டவும் இஸ்லாமிய மக்களின் ஏகோபித்த ஆதரவை எம்.ஜி.ஆர். இதன் மூலமாக பெற்றார்.

அப்துல் ரஹ்மான் கதாபாத்திரம் ஒரு சூதாட்ட கிளப் வைத்து நடத்தியதால் அங்கு புதியாக பணி எற்றுக்கொண்ட ராமு (எம்.ஜி.ஆர்.) இனி இதையெல்லாம் நிறுத்திவிட வேண்டும் என்று எச்சரிக்க முஸ்லிம் எம்.ஜி.ஆரை காவல் நிலையத்துக்கு வரச் சொல்கிறார். அங்கு வந்த அப்துல் ரஹ்மான் நாற்காலியில் உட்காரப் போகும் போது நாற்காலியை இன்ஸ்பெக்டர் ராமு தட்டிவிட்டு ரஹ்மான் ஒரு கிரிமினல் அவனுக்கு அங்கு மரியாதை கிடையாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார். அவமானப்பட்ட ரஹ்மான் ‘இது உன் இடம். நீ செய்யல உன் உடுப்பு அதிகாரம் பதவி இதச் செய்கிறது. என் இடத்துக்கு வா பார்க்கலாம்’ என்று சொல்லிவிட்டு வந்துவிடுகிறார். கோபக்கார இளைஞனான ராமு, ரஹ்மானின் சவாலை ஏற்று அவரது கிளப்புக்கே தனியாக வருகிறார்.

ரகுமான் எம்.ஜி.ஆர். : வாங்க இன்ஸ்பெக்டர் சாப். சலாம் அலேக்கும்

ராமு எம்.ஜி.ஆர். : அலேக்கும் சலாம்.

ரகுமான்.எம்.ஜி.ஆர். : சாப் வீட்லே சொல்லிட்டு வந்துட்டான்?

ராமு எம்.ஜி.ஆர். : ரகுமான் வீணா அலட்டிக்காத. இப்போ நான் உன் இடத்துக்குதான் வந்திருக்கேன். போலீஸ் உடுப்பு இல்ல, நான் டியூட்டியிலயும் இல்ல, என்ன சொல்ற அடிபணிய போறீயா? அடி வாங்கப்போறியா?

[அப்போது வேறொருவன் இன்ஸ்பெக்டர் ராமுவைத் தாக்கும் நோக்கத்துடன் வந்து கத்தியை நீட்டியவுடன் ரஹ்மான் அவனைத் தடுத்து . . .]

ரகுமான் : அரே ரதீப் க்யாரோப இது நம்பல் விசயம், நிம்மல்கி பேசாம இரு. அரே இன்ஸ்பெக்டர் சாப் நிம்மல்கு முடிஞ்சா காப்பாத்திக்கோ. இந்தா (கத்தியை எடுத்து வீசுதல், அதை தடுத்தவுடன்) அரே நம்பல்ட விளையாடுறான்?

இருவருக்கு இடையிலும் கடுமையான சண்டை நடக்கிறது. அப்போது அங்கிருந்த ஒரு ஆறடி உயரமுடைய நெருப்பு கம்பம் ரஹ்மான் மீது விழப் போகும் நேரத்தில் ராமு அவனை வேறு பக்கமாக தள்ளி காப்பாற்றிவிடுகிறார்.

ரகுமான் : அச்சா . . . நிம்பல் இன்னக்கி நம்பல் உயிரை காப்பாத்திருக்கான். இந்த அப்துல் ரகுமான் என்னைக்கும் அத மறக்குறான் இல்லே. இனிமேல் நம்ம ரெண்டுபேரும் தோஸ்தாகுறான் கையை கொடு சாப்.



சிரித்து வாழ வேண்டும்

ராமு : நோ . . . நாளைக்கே இந்த சூதாட்ட கடையை மூடுனால்தான் நம்ம ரெண்டு பேரும் நண்பர்கள் ஆக முடியும்.

ரகுமான் : நல்லது செய்ய நாள் பாக்குறான்? இந்த அப்துல் ரகுமான் நெனச்சா செய்றான். இந்த சூதாட்ட கடையை நம்பல் இப்பவே மூடுறான்; மாலும்?

ராமு : சபாஷ்! இப்ப நான் சம்மதிக்கிறேன். நீங்க உஸ்தாத் தான் அப்துல் ரகுமான் தான்னு

ரகுமான் : ராமு பையா நம்பல் உஸ்தான், நிம்பல் உஸ்தாத்கி உஸ்தாத்.

மோதலின் முடிவின் இருவரும் நண்பராகி விடுகின்றனர். பின்பு ஒரு படுகொலையில் முக்கிய சாட்சியான லதாவை ராமு எம்.ஜி.ஆர். ரஹ்மானின் பொறுப்பில் விட்டுவைக்கிறார். ரஹ்மானும் ராமுவின் வேண்டுகோள் படி சூதாட்டக் கிளப்பை மூடி விட்டு ஆட்டோ ஓட்டி பிழைக்க தொடங்குகிறார்.

ரிகஷாக்காரராக நடித்து அந்தப் படத்தில் அவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கிய எம்.ஜி.ஆர். இப்போது ஆட்டோ ஓட்டுனராக நடித்து அவர்களின் அன்பையும் ஆதரவையும் தனது கட்சிக்குப் பெற்றார்.

நிறைவு

உலகம் சுற்றும் வாலிபன் படத்துக்கு விளம்பரம் செய்ய முடியாமல் பல் வகையிலும் திமுக ஆட்சி தொல்லை கொடுத்த போது முதன் முறையாக புதிய முறையில் எம்.ஜி.ஆர். தனது படங்களில் உதவி இயக்குனராக இருந்த தனது விசுவாசியுமான இடிச்சபுளி செல்வராஜின் தம்பியான பாண்டுவின் மூலமாக ஸ்டிக்கரை அறிமுகம் செய்தார். இந்த விளம்பர ஸ்டிக்கரை ஆட்டோக்காரர்கள் தங்களின் வண்டியின் முன் பின் கண்ணாடிகளின் ஓரத்தில் ஒட்டி எம்.ஜி.ஆருக்கு முழுமையான ஆதரவளித்தனர். உலகம் சுற்றும்

வாலிபன் வசூலில் சாதனை ஏற்படுத்தியது. அதற்கு நன்றிக்கடனாக எம்.ஜி.ஆர். இப்படத்தில் ஆட்டோக்காரராக நடித்தார் எனலாம். எம்.ஜி.ஆர். படத்தில் அவர் ஏற்கும் கதாபாத்திரமும் அதற்கு சூட்டப்படும் பெயரும் சிறப்பான காரணங்களுடன் வெகு கவனமாக திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன. எனவே எம்.ஜி.ஆருக்குக் கிடைத்த வெற்றி என்பது மிகவும் நுணுக்கமான திட்டமிடலும் அன்பு பாசம், பரிவு, மக்கள் நலம் என்ற மனித நேயமும் இணைந்ததாகும்.





8. மல்யுத்தம் மற்றும் பளுதூக்குதல்

எம்.ஜி.ஆர். 1950 ஆம் ஆண்டுவாக்கில் கோவையில் உள்ள மாருதி தேகப் பயிற்சி சாலையில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் வந்து உடற்பயிற்சி வீர விளையாட்டுக்களில் ஈடுபடுவது வழக்கம். அப்போது அவருடன் நம்பியாரும் சாண்டோ சின்னப்பா தேவரும் சேர்ந்திருப்பார் அவர்களுக்குள் போட்டி வரும். அப்போது எம்.ஜி.ஆர். பளு தூக்குதவதில் முதல் ஆளாக இருப்பார். அதன் பின்னர் அவர் தனது படங்களிலும் மல்யுத்தம் மற்றும் பளுதூக்குதல் காட்சிகளை அமைத்தார்.

மேகலா பிக்சர்சின் காஞ்சித்தலைவன் [1963] படம் கருணாநிதியும் எம்.ஜி.ஆரும் கூட்டாகத் தயாரித்த படம் அதில் எம்.ஜி.ஆர். காஞ்சியை ஆண்ட நரசிம்ம பல்லவனாக நடித்தார். நரசிம்ம பல்லவன் சிறந்த மல்யுத்த வீரன் என்பதால் அவனை மாமல்லன் என்று அக்காலத்தில் அழைத்தனர். அவன் சிற்பக்கலையில் ஈடுபாடு கொண்டவனாக இருந்ததால் அவன் எழுப்பிய நகரம் மாமல்லபுரம்

எனப்பட்டது. காஞ்சித் தலைவன் என்ற பெயர் காஞ்சியில் பிறந்து திமுகவின் தலைவராக விளங்கிய அண்ணாவையும் குறித்தது. இத்தகைய சிறப்பு கொண்ட படத்தில் எம்.ஜி.ஆர். மல்யுத்தக் காட்சியை சிறப்பாக வைக்க திட்டமிட்டார்.

ஆந்திர மாநிலத்தில் நெல்லூரைச் சேர்ந்த நல்ல உயரமும் எடையும் கொண்ட காந்தாராவ் என்பவரை இக்காட்சியில் நடிக்க ஒப்பந்தம் செய்தார். காந்தாராவ் முதலில் சிலருடன் போரிட்டு வெற்றி பெற்ற பிறகு கடைசியில் அவர் பல்லவ நாட்டின் வீரத்தை எள்ளி நகையாடியதால் எம்.ஜி.ஆர். தன் நாட்டின் சுய மரியாதையை காக்க வேண்டி களத்தில் இறங்குவதாகக் கதை அமைக்கப்பட்டது.

படப்பிடிப்பின் போது மல்யுத்தக் களத்தில் இறங்கிய எம்.ஜி.ஆரை காந்தாராவ் அலட்சியமாகக் கருதினார். எம்.ஜி.ஆரை அவர் வெறும் நடிகர் என்றே எண்ணினார். எம்.ஜி.ஆருக்கு மல்யுத்தம், பளுதூக்குதல் ஆகியவற்றில் பயிற்சி உண்டு



காஞ்சித்தலைவன்

என்பதை காந்தாராவ் நம்பவில்லை. காரணம் அவர் நடிகர்களைச் சந்தித்ததில்லை. அதனால் எம்.ஜி.ஆரை சீண்டிக்கொண்டும் துன்புறுத்தும் வகையில் நடித்துக்கொண்டும் இருந்தார். இரண்டு மூன்று முறை மன்னித்த எம்.ஜி.ஆர். அடுத்த காட்சியில் காந்தாராவை தோளுக்கு மேலே தூக்கி மூன்று முறை சுற்றி கீழே எறிந்தார். காந்தாராவுக்கு அவமானமாகப் போய்விட்டது. இதுவரை யாரும் அவரை அப்படி தூக்கியதில்லை. அது முழு தோல்வி ஆகும். உடனே காந்தாராவ் நகர்ந்து வந்து எம்.ஜி.ஆரின் காலைத் தொட்டு வணங்கினார். 'உங்களைத் தவறாகக் கணித்துவிட்டேன். மன்னித்து கொள்ளுங்கள். இங்கு நடந்தது வெளியே தெரிய வேண்டாம். எனக்கு பெருத்த அவமானம்' என்று சொல்லி கண் கலங்கினார்.

அன்பே வா [1965] படத்தில் எம்.ஜி.ஆருக்கு வழக்கம் போல சண்டைக் காட்சிகள் வைக்க கதையில் இடமில்லை. இது ஒரு மென்மையான காதல் கதை என்று இயக்குனர் திருலோகசந்தர் சொல்லிவட்டார். சரோஜாதேவி தன் கல்லூரி மாணவிகளுடன் சிம்லாவை சுற்றிப் பார்க்க சென்ற இடத்தில் ஒரு முரடனிடம் மாட்டி கொண்டதாக ஒரு நிகழ்ச்சியை வைத்து அங்கு விளையாட்டாக ஒரு சண்டைக் காட்சியை வைத்தனர். நாகேஷ் இருப்பதால் அதில் நகைச் சுவையும் சமமாக இடம்பெற்றது.

சிட்டிங் புல் என்ற மனிதரை கேலி செய்த நாகேஷின் கழுத்தில் அவர், தான் வளைத்துக் காட்டிய இரும்புக் கடப்பாறையை வளையமாக மாட்டுவார். அப்போது சரோஜாதேவி அந்த முரடனின் முதுகில்



அன்வே வா

அடிக்கவும் கோபமாகத் திரும்பிய முரடன் சரோஜாதேவியை தவறான நோக்கத்துடன் நெருங்கினார். எம்.ஜி.ஆர். அதைத் தடுக்கும் முயற்சியில் இருவரும் மோதிக் கொள்வர். விளையாட்டாக எம்.ஜி.ஆர். சண்டை இடுவார். முரடனைத் தாக்க வேண்டும் என்பது எம்.ஜி.ஆரின் கொள்கை அல்ல.

எம்.ஜி.ஆர். தான் விரும்பும் சரோஜாதேவியிடம் சிட்டிங் புல் தவறாக நடந்து கொள்ள கூடாது என்ற அறிவுரையை வழங்குவதற்காக சிட்டிங் புல்லின் அடிகளை எதிர்கொள்வார். அவன் முரட்டுத் தனமாக மோதும் போது எம்.ஜி.ஆர். சிரித்த படி விலகிக்கொள்வார் அவன் தரையில் போய் முட்டி மோதி விழுவான். பிறகு அவனை தலைக்கு மேலே தூக்கி சுற்றி கீழே போட்டு விட்டு சட்டென்று பக்கவாட்டில் விலகி

விடுவார். இந்தக் காட்சியும் எம்.ஜி.ஆர். பளுதூக்குவதில் வல்லவர் என்பதை உணர்த்தும்.

காவல்காரன் படத்தில் ஆர்.எஸ்.மனோகருடன் குத்துச் சண்டை போட்டு வெற்றி கொள்வார். அப்போதும் அவர் தனக்குச் சண்டை தெரியும் என்று சொல்லாமல் படப்பிடிப்பின் போது அவர் நடந்து கொண்ட முறைகளைக் கொண்டு புரிய வைத்தார். குத்துச் சண்டை போடும்போது எம்.ஜி.ஆர். அந்த சண்டைக்குரிய கால் கை அசைவு முறைகளை மட்டும் பயன்படுத்தாமல் சினிமா ரசிகர்களுக்காக சிலம்பாட்டம், புலியாட்டம் முறைகளை



காவல்காரன்

இணைத்தார் என்று சந்திரகுமார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். எங்கும் எப்போதும் எம்.ஜி.ஆர். தனக்குச் சண்டை தெரியும் தன்னால் ஒரே நேரத்தில் பத்துப் பேரை எதிர்க்க முடியும் என்று சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால் அதைச் செய்துகாட்டிப் புரிய வைப்பதில் கெட்டிக்காரராக இருந்தார்.

பட்டிக்காட்டு பொன்னையா படத்தில் கிளைமேக்ஸ் காட்சியில் இரண்டு எம்.ஜி.ஆரும் இரண்டு மாற்றுப் பெயர்களில் மோதுவர். வெற்றி பெற்றவருக்குப் பரிசு கிடைக்கும் போது அதனைக் கொண்டு குடும்பக் கடனைத் தீர்க்கலாம் என இருவரும் கருதினர். படத்தில் இக்காட்சி இருவரும் முகமுடி அணிந்ததனால் ரசிக்க முடியாதபடி போயிற்று. குத்துச் சண்டை தேர்ந்தவர்கள் அவர்களின் சண்டை நுணுக்கங்களை ரசித்தனர் ஆனால் மற்றவர்கள் எம்.ஜி.ஆரின் முகம் தெரியாததாலும் மோதும் இருவரில் எவர் தோல்வி அடைந்தாலும் ஒரு நல்ல எம்.ஜி.ஆரே தோற்றுப் போவதாலும் இந்தச் சண்டை ரசிகர்களின் மனதில் ஒரு நல்ல தீர்வாக அமையவில்லை. அதனால் இப்படம் எதிர்பார்த்த வெற்றியையும் வசூலையும் கொடுக்காமல் போயிற்று. [மேலும் கதாநாயகியை எம்.ஜி.ஆரே நாணம் கெட்டவளே, அடியே நடத்தை கெட்டவளே என்று பாடியதைப் பெண்கள் ஏற்கவில்லை. அதுவரையிலும் அதற்கு பிறகும் பாட்டிலோ வசனத்திலோ எம்.ஜி.ஆர். பெண்களை மரியாதையின்றி குறிப்பிட்டதில்லை. எனவே இப்பாடல் வரிகள் கரும் புள்ளியாக அமைந்துவிட்டன].

நிறைவு

எம்.ஜி.ஆர். தனது சண்டைக் காட்சிகளில் இரசிகர்களின் ரசனைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். குறிப்பிட்ட சண்டையின் விதிமுறைகளுக்கும் கட்டுப்பட வேண்டும், அதே வேளையில் இரசிகர்கள் எழுந்து வெளியே போக வைக்கும்படி சண்டைக் காட்சி சலிப்பூட்டவும் கூடாது. அவர்கள் அமர்ந்து ரசிக்கும்படியும் சிறுவர்கள் கொண்டாடும்படியும் பெண்கள் தாக்கு, தடுப்பு, மடக்கு ஆகியவற்றை புரிந்துகொள்ளும்படியும் காட்சிகளை அமைத்ததால் இன்றும் அவரது சண்டைக் காட்சிகள் பேசப்படுவனவாக அமைந்துள்ளன.



உழைக்கும் கரங்கள்


from
today
at
CHITRA-BHUVANESWARI
AND ALL OVER SOUTH
BROADWAY
The Great
MOTION
PICTURE
EXTRAVAGANZA
You've been
Waiting for!
MEKALAS
KĀNJITTHALAIVAN
STORY & DIALOGUE :
M.KARUNANIDHI
DIRECTION :
A.KASILINGAM

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்



₹ 200/-